விலை: 50.00 பக்கங்கள் : 20

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

சங்கு 25 ஒலி 326 வள்ளுவர் ஆண்டு 2055

ஐப்பசி 23 சனிக்கிழமை (09.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மக்களின் எதிர்பார்ப்பை

# அநுர நாளுக்கு நாள்

# புஸ்வாணமாக்குகிறார்

## சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு) மக்களின் எதிர் பார்ப்பை ஜனாதிபதி அநுர நாளுக்கு நாள் புஸ்வாணமாக்கு கிறார் என சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வங்காள விரிகுடாவில் காற்றுச் சுழற்சி

### 12ஆம் திகதி வரை வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 12ஆம் திகதி வரை வடக்கில்மழை தொடர

19

## தவறாமல் வாக்களியுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்த லின் போது, இலங்கையி லுள்ள அனைத்து வாக்

19

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**நல்லூர் பாம் சென்ரர்**
**(மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)**

உள்ளூர் உற்பத்தி – கல்பேர்ட், புரொயிலர், (பேரன்ஸ்), ஊர்க்கோழி, முட்டைகள் விற்பனைக்குண்டு. தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை விரும்பிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-1544)

**19, முருகேசர் லேன், நல்லூர்.**
**TP : 077 712 6536**



## உணவகம் (Restaurant) வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் அமைந்துள்ள அசைவ உணவகம் (Restaurant) வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிட முடியும்.

(2594)

**தொடர்பு : 074 2349 120(சிறி)**


## ஒருவர் மரணம்

கேகாலை, மாவனெல்லை - ஹெம் மாத்தகம வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாவனெல்லை பொலிஸார் தெரிவித்தனர். ஹெம்மாத்தகமவிலிருந்து மாவனெல்லை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த முதியவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ம)

## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேச சபை
## அபிவிருத்தி திட்டம் (StampDuty) மற்றும் சபைநிதி வேலைத்திட்டங்கள் (திருத்தம் தொடர்பானது)

சாவகச்சேரி பிரதேச சபையின் அபிவிருத்தி திட்டம் (StampDuty) மற்றும் சபைநிதி வேலைத்திட்டங்கள் - 2024 தொடர்பாக 31.10.2024 திகதி வலம்புரி பத்திரிகையில் பக்கம் 14 இல் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் கீழ்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

குறித்த தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 8 ஆம் பந்தியில், "ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.11.20 ஆம் திகதி மாலை 02:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2024.11.20) மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்."

9 ஆம் பந்தியாக, கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/Stampduty/2024/03 & NP/14/41/(6)/2/C.F/2024/88-95 இலக்க வேலைக்கு 63 நாட்கள் (2025.01.22) மற்றைய வேலைகளுக்கு 77 நாட்கள் (2025.02.05) வரையும் செல்லுபடியாகும்.

என மாற்றம் செய்யப்பட்டுள்ளன. ஏனைய விபரங்களில் எதுவிதமாற்றமும் செய்யப்படவில்லை. மேலதிக விபரங்களினை அலுவலக நேரத்தில் செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம். எனும் முகவரியில் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தகவல்,
தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேச சபை.

(C-1542)

06.11.2024


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 84 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- **பார்வையிடும் நேரம்**
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

(2591)

**077 814 7389, 077 986 5457**


# வரதாஞ்சலி மலர் வெளியீடும் நினைவுப் பேருரையும்

திகதி
**10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) 10.30 மு.ப**

இடம்
**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் நல்லூர்**

## நிகழ்ச்சி நிரல்

10.30மு.ப உருவப்படம் திரைநீக்கம்

10.31மு.ப அமரருக்கு மலர்மாலை அணிவித்தல்

10.32மு.ப விளக்கேற்றல்

11.00மு.ப "வரதாஞ்சலி" மலர் அறிமுகம்

11.15மு.ப நினைவுப் பேருரை

12.30பி.ப அமரர் நினைவுதினச் செயல்திட்டங்கள் முன் அறிவிப்பு

1.00பி.ப நன்றியுரை

1.10பி.ப மதியபோசன உபசரிப்பு



வையகம் போற்றும் நல்லாசானாக வாழ்ந்து நன் மாணாக்கர் பலரை உருவாக்கி இன்றும் எங்கள் மனங்களில் நிறைத்திருக்கும்

**அமரர்**
**தம்பிப்பிள்ளை வரதராஜா B.Ed**

**மேற்படி நினைவுப் பகிர்வுசார் மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்தும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன உபசரிப்பிலும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

THE EXPRESS INSTITUTE KOPAY A BOON TO STUDENTS

(2589)

ஏற்பாட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விடுமுறை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு 13ஆம் திகதி புதன்கிழமை முதல் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள் மற்றும் அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு மையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் 12 ஆம் திகதி பாடசாலை நிறைவடைந்ததும் தேர்தல் பணிக்காக அந்தந்த கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அனைத்துப் பாடசாலைகளும் 13ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் 18 ஆம் திகதி திறக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (றி-8)

பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம், கிளிநொச்சி
தேர்தல் மாவட்டம்
பொங்குதமிழ் நாயகன்
இம்மானுவல் ஆனல்ட்
2


இலங்கை தமிழரசுக்கட்சி

(சி-147)

பாராளுமன்றத் தேர்தல் 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
தேசியம் - சூழலியம் - சுயநிர்ணயம்
அரசியலில் தமிழ்த் தேசியச் செழுமை!
அபிவிருத்தியில் நிலைபேறான முழுமை!
சுற்றுச்சூழலில் காணுமிடமெல்லாம் பசுமை!
01


நா.பார்த்தீபன்
கூட்டுறவாளர்
06
தமிழ்த் தேசிய அரசியலில் ஒலிக்கும்
ஒரேயொரு பசுமைக்குரல்
பொ.ஐங்கரநேசன் M.Sc, PGDJMC
சுயேச்சைக் குழு - 14
(சி-155)
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பு

பாராளுமன்றத் தேர்தல் 2024 யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

2
கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்
LLB (Hons)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
5
நடராஜர்
காண்டீபன்
LLB (Hons)
சிரேஸ்ட சட்டத்தரணி
9
செல்வராசா
கஜேந்திரன்
BBA
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
இரு தேசங்கள்
ஒரு நாடு

(சி-146)
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் கலந்து கொள்ளும்
மாபெரும் பொதுக்கூட்டம்...!
10.11.2024 (ஞாயிறு) மல்லாகத்தில்...!
மாலை 4.30 மணிக்கு
மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் முன்பாக
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி கட்டமைப்பினை ஏற்படுத்த இடமளியோம்

## சரத் வீரசேகர



*(கொழும்பு)*


ஒற்றையாட்சியைப் பாது காப்பதற்கு 29 ஆயிரம் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, இந்த நாட்டில் சமஷ்டி கட்டமை ப்பைக் ஏற்படுத்துவதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட் டோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.

2015 நல்லாட்சிக் காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்புப் பணி இறுதிப் படுத்தப்படும் என்ற உறுதி மொழியை ஜனாதிபதி அநுர வழங்கியுள்ளார். இலங்கை மதச் சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் எனவும், மாகாண சபைகளுக்குரிய அதிகாரம் பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதில் வலியுறுத் தப்பட்டுள்ளது.

மாகாண சபையில் நிறை வேற்றப்படும் சட்டங்களை மத்திய அரசு இரத்துச் செய்ய முடியாது. மாகாண இணைப் புக்குரிய அதிகாரமும் மாகாண சபைக்குச் செல்லும். எல்லை நிர்ணயம்கூட மாகாண சபை வசம் செல்லும் வகையில் ஏற் பாடுகள் உள்ளன. எனவே, 2015 அரசமைப்பு அமுலுக்கு வந்தால் இலங்கை சமஷ்டி நாடாக மாறும். பாராளுமன்ற அதிகாரம் குறையும். எனவே, இதற்கு இடமளிக்கக் கூடாது.

ஒற்றையாட்சியைப் பாதுகாப் பதற்குப் படையினர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். எனவே, சமஷ்டி முறைமைக்கு இடம ளிக்கமாட்டோம். தமிழ் டய ஸ்போராக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் தயா ரில்லை.

ஆட்சியாளர்கள் கள்வர்கள் எனக் கூறியே அநுர தரப்பு ஆட்சிக்கு வந்தது. ஆனால், இன்னும் கள்வர்கள் பிடிபட வில்லை. இதன்மூலம் அவர்கள் கூறியவை பொய்கள் என்பது உண்மையாகியுள்ளன என்றார். (ம)



# வெடுக்குநாறிமலை ஆலய விவகாரம்

## ரி.ஐ.டி இருவருக்கு அழைப்பு

*(வவுனியா)*

வவுனியா வடக்கு வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய விவகாரம் தொடர்பில் அவ் ஆலயத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இருவரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் (ரி.ஐ.டி) விசாரணைக்கு அழைத்துள்ளனர்.


வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார் மற்றும் முன்னாள் செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரை இன்று சனிக்கிழமை வவுனியாவில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, முன்னாள் போராளியான சசிகுமாரின் அனைத்து புனர்வாழ்வு ஆவ ணங்களையும் விசாரணைக்கு கொண்டு வருமாறு பயங்கரவாத தடுப்புப்புலனாய்வு திணைக்களத்தினால் தொலைபேசி அழை ப்பு மூலம் அவருக்கு அறிவிக்கப்பட் டுள்ளதாக தெரிவித்துள்ளார். (ம-250)

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

### வாசகர்களின் கருத்துக்கணிப்பு

**அன்பார்ந்த வாசகர்களே! உங்களின் தேர்தல் கணிப்பை தெரியப்படுத்த அரிய சந்தர்ப்பம். நாளைய வலம்புரி நாளிதழை தவறாமல் பாருங்கள்..**


பாராளுமன்றத் தேர்தல் - 2024
யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பொன்னை பொருளை பெறு நற் புத்திரனை தன் தமிழுக்காய் ஈந்த தலைவர் தர்மலிங்கத்தின் புதல்வன்
சித்தார்த்தன்

* கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் உருவாக்கத்திற்காக தனது குடும்ப சொத்தை (226 பரப்பு) 100 கோடி பெறுமதி கொண்ட நிலத்தை நன்கொடையாக வழங்கியவர்.
* கல்வியே கண்ணெனக் கொண்டு பாடசாலைகள் அற்ற பிரதேசத்தில் அறிவுப் பசியினை போக்க தன் கிராமமான கந்தரோடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகள் உருவாக்குவதற்கு தமது சொத்தின் பெரும்பகுதியை வழங்கி பல்லாயிரக் கணக்கானோர்களின் அறிவுப் பசியை தீர்த்தவர்கள்.

என்றும் எம் தமிழ் இனத்திற்காய் தன்னை ஈந்த பெருந்தகையை ஆதரிப்போம்
X 5
(073)

தமது சொந்த நிலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரியவர்கள். சிறியவர்கள் இளைப்பாறி மகிழ சுப்பிரமணியம் பூங்காவினை உருவாக்கியவரின் வழித்தோன்றல் சித்தார்த்தனே...
ஒற்றுமைக்காய் ஒன்றிணைந்து... எம் மக்களுக்காய் சேவை செய்யும் எம்மவர்களை ஆதரிப்போம்
5 6
பாலச்சந்திரன் கஜதீபன்



“ஒரு வாக்கு, மாற்றம்
உங்கள் வாக்கு புதிய யுகத்தின் முதற்படி!”
அ.கிருபாகரன்


அ.கிருபாகரன்
[ கிருபா லேணர்ஸ் உரிமையாளர் ]
X 2
(C-165)
பாராளுமன்ற தேர்தல் - 2024



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம்,
கிளிநொச்சி மாவட்டம்




- முல்லைத்தீவு குருந்தூர் மலை முதல் வவுனியா வெடுக்குநாரி மலை ஈறாக வடக்குக் கிழக்கெங்கும் தமிழரின் அடையாளங்கள் அழிக்கப்பட்டபோது சட்டப்போர் தொடுத்தவன்.
- நூற்றுக்கும் அதிகமான பொதுநல வழக்குகளில் கட்டணமின்றிக் களமிறங்கியவன்.
- முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளாகத்தினுள் பௌத்த பிக்குவின் உடலை எரிக்க முற்பட்டபோது சட்டப் போராட்டத்தைத் தொடுத்தவன்.
- பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட அப்பாவிகளுக்காகத் துணிந்து களத்தில் இறங்கியவன்.
- மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள், மாவீரர் நாள் நினைவேந்தல்களைத் தடுப்பதற்கு வடக்குக் கிழக் கெங்கும் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிறைந்த வழக்குகளை முறியடித்தவன்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது இறந்த உறவுகளை நினைவுகூர்ந்த பத்து அப்பாவிகளைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தபோது சட்டத்தின் வழியில் போராடி விடுவித்தவன்.
- திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சியமைக்காகக் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை வழக்காடி விடுவித்தவன்.
- யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பொலிஸ் காவலில் மரணமடைந்த இளைஞர்களுக்காக நீதி கேட்டவன்.
- மானிப்பாயில் தனியார் காணிகளை ஆக்கிரமித்திருந்த அரச ஆதரவு ஆயுதக்குழுவை வழக்காடி வெளியேற்றி யவன்.





**சட்டப் போரைத் தொடர....**

கனகரட்ணம்
**சுகாஷ்**
(சட்டத்தரணி)


X 1

**இலக்கு ஒன்றே இனத்தின் விடுதலை!**

(சி-148)

## பாராளுமன்றத் தேர்தல் - 2024








- நேர்மையான அப்பழுக்கற்ற தலைமை!
- பார்பெர்மிட் கேட்காத, பெறாத ஒரே கட்சி!
- அமைச்சுப் பதவிகளை நாடாத, வளைந்து கொடுக்காத நேர்மை!
- தேர்தல் காலத்தில் ஒரு பேச்சும் கொழும்பிலும் வெளிநாட்டிலும் வேறு பேச்சும் என்று மக்களை ஏமாற்றாத தலைமை!
- ஜேவிபி அரசாங்கத்தை பொறுப்புக் கூற வைக்கக் கூடிய ஒரேயொரு தமிழ்த்தரப்பு!

**பேண்தகு தமிழ்த் தேசியத்திற்கே வாக்களியுங்கள்**

(070)

**தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாத்திரமே!**


X

**நேர்மையான தமிழ் தேசியத்திற்கான சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலை அனுமதி
# போலித் தகவலை பரப்பியவருக்கு எதிராக முன்னாள் எம்.பி சிறீதரன் சட்ட நடவடிக்கை



(கிளிநொச்சி)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மதுபானசாலை அனுமதிக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கியுள்ளதாக போலிக் கடிதம் ஒன்றுடன் முகநூலில் விசமப் பிரசாரம் செய்த ஒருவருக்கு எதிராக நேற்றையதினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் முறைப்பாடு செய்ததன் பின்னர், சிறீதரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜனநாயக முறைப்படி உட்கட்சித் தேர்தலின் அடிப்படையில் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட என்னை நீதிமன்ற வழக்கினால் இயங்க விடாது தடுத்தவர்களின் மற்றொரு முயற்சியாக, எனது கடிதத் தலைப்பையும் பதவி முத்திரையையும் முறைகேடாகப் பயன்படுத்தி தொழில்நுட்ப உதவியோடு போலியான கடிதத்தைத் தயாரித்து முகநூலில் விசமப் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தகைய வதந்திகளை பரப்பும் நபரொருவர் மீது நேற்றையதினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.


தொடர்ச்சியான முறைமைகளுக்குட்பட்டு குறித்த நபர் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வெளியிடப்பட்ட கடிதம் போலியானது என்பதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்கள் அந்தக் கடிதத்திலேயே உள்ளன. அறிவிலித்தனமாகச் செயற்பட்டு வரும் இவர்களை எமது மக்கள் எளிதில் இனங் கண்டு கொள்வார்கள்.

என்னை விசுவாசிக்கும் எனது மக்களுக்கு நான் மீளவும் ஒன்றை வலியுறுத்திக் கூறுகிறேன். இதுவரை காலமும் நான் மதுபானசாலை அனுமதிப் பத்திரத்தை பெறவோ, அத்தகைய அனுமதி ஒன்றுக்கு சிபாரிசுக் கடிதம் வழங்கவோ இல்லை.

அவ்வாறு நான் வழங்கியிருப்பதாக யாராவது கருதினால், ஜனாதிபதி செயலகத்திலோ, மதுவரி திணைக்களத்திலோ உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை வெளிப்படுத்துங்கள். அதை விடுத்து பிற்போக்குத்தனமான அற்ப அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு உங்களை நீங்களே தரம் தாழ்த்திக் கொள்ளாதீர்கள் என அவர் தெரிவித்தார். (ந-8)

# சைவ சமயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்
## கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன்



(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசியலமைப்பில் சைவசமயத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் தான் யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சை குழு 12 போட்டியிடுவதாக சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் தெரிவித்தார்.

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்

மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசியலமைப்பில் மத்வாதம் இருக்கிறது.

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டு முதல் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதனை தமிழர்கள் எதிர்த்தார்கள். தந்தை செல்வநாயகம் அரசியலமைப்பை யாழில் எதிர்த்தார்.

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதனை ஏற்க முடியாது. அரசியலமைப்பில் மதங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால் அது சைவ சமயத்திற்கு தான் அளிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் தொடக்க சமயமாக சைவ சமயமே இருந்தது. புத்தர் இலங்கை வரும் போது இலங்கையில் மூன்று சைவ சமய அரசுகளே காணப்பட்டன. அதனை நான் சொல்லவில்லை மகாவம்சம் சொல்கின்றது. புத்தர் மத மாற்றத்தில் கூட ஈடுபடவில்லை

எனவே இலங்கை அரசியலமைப்பு மதசார்பற்றதாக இருக்க வேண்டும்.

இல்லாவிடின் சைவ சமயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (6-8-33)

## தேர்தல்களம்

VOTE

# சைவத்தமிழ் தேசியத்தை மீளுருவாக்கம் செய்ய வேண்டும்
## வேட்பாளர் ஸ்ரீந்திரன்



(யாழ்ப்பாணம்)

கடந்த பல நூறு வருடங்களாக சைவத்தமிழ் தேசியம் மறைக்கப்பட்டு, புதைக்கப்பட்டு போலி தமிழ் தேசியம் தமிழர் மத்தியில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. அது சைவத் தமிழ் மரபுகளை சிதைத்து அழித்து வருகிறது.

எனவே தான் சைவ மரபுகளை கட்டிக் காக்க ஆறு கொள்கைகளை முன்னிறுத்தி சுயேட்சைக் குழு 12 இல் ஆமைச் சின்னத்தில் போட்டியிடுவதாக முதன்மை வேட்பாளர் என்.பி.ஸ்ரீந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் தமது சொந்த ஊரான தென்மராட்சியில் மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் போலித் தமிழ்த் தேசிய மாயைக்குள் சிக்குண்டிருக்கும் பாசமிகு சைவத் தமிழ் மக்களே! அதிலிருந்து விடுபடுங்கள்.

இலங்கையில் சைவத் தமிழ் தேசியத்தை மீள் கட்டுருவாக்கம் செய்வதற்காக எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஆறு கொள்கைகளை முன்னிறுத்தி உள்ளோம்.

தேர்தல் களத்தில் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களுமாக 44 அணியினர் போட்டியிட்ட போதும் நாம் மட்டுமே தமிழரின் உண்மையான தேசியம் பற்றிப் பேசி வருகிறோம்.

எனவே பாசமிகு சைவத்தமிழ் தேசிய மக்களே எதிர்வரும் 14 ஆம் திகதி காலை சிவனாசியுடன் வாக்களிப்பு நிலையம் சென்று ஆமைச் சின்னத் திற்கே! வாக்களியுங்கள் என தெரிவித்தார். (6-8)

# அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கி நெருக்கடிகளுக்கு தீர்வு
## விஸ்வலிங்கம் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு என ஒரு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கி அதனூடாக மக்களினுடைய பல்வேறு பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.வடமராட்சி கற்கோவளம், புனிதநகர் பகுதியில் மக்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது, இம்முறை மக்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பாக கடந்த காலங்களில் பாராளுமன்றம் சென்றவர்கள் மக்களுக்கு எதுவும் செய்யாதவர்களை நிராகரித்து இளைஞர்களைத்தெரிவு செய்து அவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயினுடன் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ் . மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ். நகர்ப் பகுதியை சேர்ந்த இளைஞனை கைது செய்து சோதனையிட்ட போது அவரது உடைமையில் இருந்து 120 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

22 வயதான இளைஞனை கைது செய்த பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-8-33)













Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

பாராளு மன்றத் தேர்தலின் போது வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை சுருக்கமாக விளக்கும் பொருட்டு யாழ்ப்பாணம்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டு வாக்களிக்கும் முறைமை விளங்கப்படுத்தப் படுகிறது.

இங்கு 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேட்சசைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

அரசியல் கட்சிகளாயினும் சுயேட்சைக் குழுக்களாயினும் ஏதேனும் ஒன்றை மட்டுமே நீங்கள் தெரிவு செய்து அதற்கு வாக்களிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மாதிரிவாக்குச் சீட்டை (படம் A) ஐப் பார்க்கும் போது உங்களுக்கு இடப்பக்கமாக உள்ள பகுதியில் அரசியல் கட்சிகளின் பெயர்கள் இருக்கின்றன.

அதைத் தொடர்ந்து அக் கட்சிகளின் சின்னங்கள் இருக்கின்றன. அதனோடு ஒரு கூடு இருக்கின்றது. அக் கூட்டுக்கு உள்ளேதான் நீங்கள் விரும்பும் கட்சிக்கு புள்ளடி இட வேண்டும். உங்கள் புள்ளடி கூட்டுக்கு வெளியே நீளாத வாறு இடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இதேபோல் வாக்குச் சீட்டின் வலது பக்கத்தில் சுயேட்சைக் குழுக்களின் பெயர்களும் அவற்றோடு சேர்ந்து அதற்குரிய சின்னங்களும் தொடர்ந்து புள்ளடியிடுவதற்கான கூடும் உள்ளது.

நீங்கள் சுயேட்சை குழுவுக்கு வாக்களிப்பதாயின் வாக்குச் சீட்டின் வலது பக்கத்தை பார்த்தாலே போதுமானது.

நீங்கள் மேற்கூறியவாறு புள்ளடியிட்டவுடன் நீங்கள் உங்கள் கட்சிக்கு அல்லது சுயேட்சைக் குழுவுக்கு வாக்களித்து விட்டீர்கள்.

நீங்கள் கட்சியில் அல்லது சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உங்களுக்கு தரப்பட்ட வாக்குச் சீட்டின் கீழே 1 தொடக்கம் 9 வரை இலக்கமிடப்பட்ட பெட்டியிருக்கும். அங்குதான் நீங்கள் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்களிக்க வேண்டும்.

நீங்கள் ஒரு வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கத்திற்கு மட்டும் புள்ளடியிடவும். இரண்டு வேட்பாளர்களுக்கு மட்டும் வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிடவும். மூன்று வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிட வேண்டும். மூன்று பேருக்கு மேல் விருப்பு வாக்களிக்க முடியாது.

பாராளுமன்றத் தேர்தல் -2024 அட்டவணை -1
போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சுயேட்சை குழுக்களின் இலக்கங்கள் மற்றும் அவற்றின் சின்னங்கள் - யாழ்ப்பாணம் மாவட்டம்

| போட்டியிடும் குழு | சின்னம் | போட்டியிடும் குழு | சின்னம் |
|---|---|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | | சர்வஜன அதிகாரம் | |
| அகில இலங்கை தமிழர் மகாசபை | | சுயேட்சை குழு 1 | |
| எங்கள் மக்கள் சக்தி கட்சி | | சுயேட்சை குழு 2 | |
| புதிய சுதந்திர முன்னணி | | சுயேட்சை குழு 3 | |
| அருணலு மக்கள் முன்னணி | | சுயேட்சை குழு 4 | |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | | சுயேட்சை குழு 5 | |
| ஈரோஸ் ஜனநாயக முன்னணி | | சுயேட்சை குழு 6 | |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | | சுயேட்சை குழு 7 | |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | | சுயேட்சை குழு 8 | |
| ஐக்கிய தேசிய கட்சி | | சுயேட்சை குழு 9 | |
| மக்கள் போராட்ட முன்னணி | | சுயேட்சை குழு 10 | |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | | சுயேட்சை குழு 11 | |
| ஜனசெத பெரமுன | | சுயேட்சை குழு 12 | |
| தேசிய மக்கள் சக்தி | | சுயேட்சை குழு 13 | |
| தமிழ் மக்கள் கூட்டணி | | சுயேட்சை குழு 14 | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | சுயேட்சை குழு 15 | |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | | சுயேட்சை குழு 16 | |
| ஜனநாயக தேசிய கூட்டணி | | சுயேட்சை குழு 17 | |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | | சுயேட்சை குழு 18 | |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | | சுயேட்சை குழு 19 | |
| ஐக்கிய மக்கள் சக்தி | | சுயேட்சை குழு 20 | |
| சோசலிச சமத்துவக் கட்சி | | சுயேட்சை குழு 21 | |

(படம் - 1) → | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

(படம் - A)



# தேர்தல் சட்டங்களை மீறினால் பாராளுமன்ற உறுப்புரிமை இழக்கப்படலாம்

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எச்சரிக்கை

(கொழும்பு)

**பாராளுமன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கி வரும் நிலையில் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் பட்சத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகலாம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க வேட்பாளர்களை எச்சரித்துள்ளார்.**

நேற்றுக் காலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் எதிர்வரும் 11 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் நாட்டில் அமைதி காலம் பிரகடனப் படுத்தப்படும். தேர்தல் சட்டங்களில் அமைதி காலம் தொடர்பில் விரிவாக கூறப் பட்டுள்ளது.

தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதி காலத் தில் நடந்து கொள்ளுமாறு அனைத்து வேட்பாளர்களிடமும் [illegible] டுக் கொள்கின்றேன்.

அமைதி காலத்தில் எவ்வித தேர்தல் பிரசார நடவடிக்கைகளையும் உங்களால் நடத்த முடியாது. வீடுகளுக்குச் சென்று வாக்குக் கேட்கவும் முடியாது.

பொதுத் தேர்தல் தொடர்பில் பொது மக்களுக்கு தெளிவுபடுத்தும் இயலுமையும் [illegible] காலத்தில் தேர்தல் சட் டங்களை மீறும் பட்சத்தில் உங்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவி அற்றுப் போகலாம்.

எனவே அமைதி காலத் தில் எவ்வித தேர்தல் பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோன்று சமூக ஊடக பிரசார நடவடிக்கைகள் தொடர்பிலும் நாங்கள் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம்.

அமைதி காலத்தில் ஏதேனும் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் உடனடியாக அந்த பதிவுகளை நீக்குமாறு சம்பந்தப்பட்ட சமூக ஊடக நிறுவனங்களுக்கு நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# அறிவுத்திருக்கோவிலில் மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழப்பாணத்திலுள்ள அறிவுத்திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகளை தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் க.செல்வகுமார் வழங்கவுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772 என்னும் தொலைபேசி இலக்கத்துடன தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2



கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் சமூக நலன் மேம்பாட்டிற்காக கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என மக்களுக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது.

# E.S.P. நாகரத்தினம் கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை-கலாசாரம் என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்கள் எதிர்பார்க்கும் ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமை மிக்கவர்களும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் தருணத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் வினைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் விடுத்து நேர்மையான வினைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம்: கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**பாராளுமன்ற தேர்தல் - 2024,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால்பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் 2020ஆம் ஆண்டு முதலே மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதியும் பொறுமையுடன் அவதானித்து வந்தார். பின்னர் 2023ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்திய போதும், 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கை நோக்கி பயணித்த வேளையில், 2024ஆம் ஆண்டு எமக்கான நேரம்...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் அணியை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு அவசியம். காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டுமே மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள இந்நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அரசியல் அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நோக்கி...

**சுயேச்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன், எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் பற்றாக்குறையே எனது சுயவிருப்பத்துடன் அரசியல் அறவழிப் பிரவேசம்...

**அரசியல் தலைமைத்துவ கட்டமைப்பும், அரசியல் தீர்வும்:** சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் மற்றும் போராட்டங்கள் அறம் சார்ந்தவையாகவும், சுயாதீனமாகவும் ஓர் சீரான தலைமைத்துவ கட்டமைப்புடன் காணப்பட்டது. பேரினவாதம் மற்றும் பிரிவடைகின்ற தமிழ்த்தேசிய கட்சிகளினதும் வினைத்திறனற்ற செயலை மாற்றியமைத்தல். பெண் பிரதிநிதித்துவம், தொகுதி அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை ஷமுதன்மைப்படுத்திய ஓர் கட்டமைப்பு...
அரசியல் தீர்வு என்ற போர்வையில் இழுத்தடிப்புக்களும், அபிவிருத்தி என்ற போர்வையில் திணிப்பு மற்றும் ஊழல் ஆட்சியே காணப்பட்டது. அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி சரியான நீரோட்டத்தில் இரண்டற பயணிக்க வேண்டும். அதனை மாற்றியமைக்க ஆளுமையுள்ள புதியவர்களை உள்ளடக்கிய மாற்று அணி தேவை...

**முயற்சியாண்மை:** வளமான நிலம், உழைக்கக்கூடிய மக்கள் தமிழர் பரப்பில் உள்ள நிலையில் தேவைப்பாடான மூலதனம் மற்றும் முயற்சியாண்மை கேள்விக்குறியாகவே உள்ளது...
இதற்காக விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் ஆகிய பாரம்பரிய தொழில்களை மேம்படுத்துவதோடு சேவைத்துறைகளை (உ-ம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல்) மையப்படுத்திய மூலதனம் மற்றும் முயற்சியாண்மைக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்தல்...

**கல்வி:** ஆரம்பக்கல்வி, பாடசாலை, பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதோடு அவற்றை இடைவிடாது தொழில் சார்ந்து பயணிக்கக்கூடிய வகையில் தொழிற்கல்வியை வழங்குதல்...
வாழ்வியல் தொடர்பான கல்வி நடவடிக்கைகள், ஆரோக்கிய வாழ்வு (சுகாதாரம்), போக்குவரத்து, பிள்ளைகள் தொடர்பான பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு என பலதரப்பட்ட கல்வி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல்...

**விளையாட்டு:** மாணவப்பருவத்துடன் விளையாட்டில் உள்ள தமது ஆர்வத்தை இடைநிறுத்தாது சுய ஒழுக்கத்துடன் ஆரோக்கியமான வாழ்வியல் மற்றும் வணிக ரீதியாக செயற்படக்கூடிய ஓர் கட்டமைப்பை உருவாக்கல்...
கிராமம் முதல் நகரம் வரை விளையாட்டு செயற்பாடுகளை ஊக்குவிக்கும் ஓர் மையத்தினை (உ-ம்: மைதானங்கள்) ஏற்படுத்துவதன் மூலம் சமூக ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்தல்...

**கலை-கலாசாரம்:** எமது கலைச்செயற்பாடுகளை தொடர்ந்து நிகழ்த்துதல், புத்தாக்க செயற்பாடுகள், மீள் உருவாக்கம் என்ற அடிப்படையில் கட்டமைத்து தமிழர் பரப்பின் அடையாளமாக மாற்றியமைத்தல். மேலும் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தையும் எமது கலைகளையும் சர்வதேச மட்டம் வரை எடுத்துச் செல்லல்...
தமிழர் கலாசாரம் என்பது உலகெங்கிலும் போற்றப்படும் ஓர் விடயம். அதனது சுயாதீனத்தை இழக்காது தமிழர் பரப்பில் காணப்படும் கலாசார விழுமியங்களை பேணிப்பாதுகாத்தல்...

**சுயேச்சை வேட்பாளர்**
பேரினவாதத்திற்கும், தமிழர் பரப்பில் உள்ள கட்சிகளின் பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே எனது அரசியல் பிரவேசம். அறவழியில் சுயவிருப்பத்துடன் தேர்தல் களத்தில் மேற்கூறப்பட்ட ஐந்து அம்ச ஆளுமையுடைய எனது வருகை மாற்றத்தை நோக்கி, மாற்று சிந்தனையுடன், மாற்று வழியில், மாற்றத்திற்கான நம்பிக்கை...

(C-152)

களத்தில் கமல்

**"வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புதுவிடியலை நோக்கி பயணிக்கட்டும்"**

மாற்றத்திற்கான நம்பிக்கை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# உக்ரைனுக்கு உத

# ட்ரம்ப் தலைமையி

## முடிவை எதிர்பார்த்தி

(வோஷிங்டன்)

**நாங்கள் சண்டையை தொடரப் போவதில்லை சண்டையை நிறுத்தப் போகிறோம் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.**

நடைபெற்று முடிந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் வெற்றி உரையாற்றினார். அதன்போது இவ்வாறு தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம், வெளியுறவுக் கொள்கையில் எவ்வாறு செயற்பட இருக்கிறது என்பதை உலக நாடுகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

தற்போது உக்ரைன்- ரஷ்யா இடையேயும், இஸ்ரேல்- காசா, இஸ்ரேல்- ஹிஸ்புல்லா இடையேயும் சண்டை நடைபெற்று வருகிறது.

உக்ரைன்- ரஷ்யா இடையிலான சண்டை முடிவுக்கு வர வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது. இந்த நிலையில் டொனாலட் ட்ரம்ப் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வோம். ஆனால் எங்களுடைய நிலைமைகள் மாற்றப்படவில்லை ரஷ்யா தங்கள் நாட்டின் ந னில் உறுதியாக நிலைத் நிற்கிறது. உக்ரைன் மோ லில் தங்களுடைய இலக்கை அடையும் வகையில் செயற்ப வோம் என ரஷ்யா தெ வித்துள்ளது.

இதன் மூலம் உக்ரை னுக்கு எதிராக போர் தொடரு என்பதை ரஷ்யா மறைமு மாக தெரிவித்துள்ளது. உக்ரை னுக்கு அமெரிக்க மிகப்பெரி

## தாக்குதல் நடத்துபவர்களின் சொந்தங்கள் வெளியேற்றம்

### இஸ்ரேல் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றம்



(காசா)

இஸ்ரேல் பாராளுமன்றத்தில் தாக்குதல் நடத்துபவர்களின் குடும்பங்களை வெளியேற்றுவதற்கு வழிவகை செய்யும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கட்சி மற்றும் அவருடைய ஆதரவு வலதுசாரி கட்சிகள் இந்த சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தன. பாராளுமன்றத்தில் 61 உறுப்பினர்கள் இந்த சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். 41 பேர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் நீதிமன்றம் இந்தச் சட்டத்திற்கு தடைவிதிக்க வாய்ப்புள்ளதாக சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலில் உள்ள பாலஸ்தீனர்கள், இணைக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் உள்ளவர்கள், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் தாக்குதல் குறித்து முன்னதாக தெரிந்துள்ளவர்களாக இருந்தால், பயங்கரவாத செயல்களுக்கு ஆதரவு அல்லது அடையாளத்தை தெரிவிப்பவர்களாக இருந்தால் இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு நாடு கடத்தப்படுவார்கள். அவர்கள் ஏழு முதல் 20 ஆண்டுகளுக்கு காசா முனை அல்லது மற்ற பகுதிக்கு நாடு கடத்தப்படுவார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைக்கு இந்த சட்டம் பொருந்துமா? என்பது தெளிவாகத் தெரியவில்லை, அங்கு இஸ்ரேல் ஏற்கனவே தாக்குபவர்களின் குடும்ப வீடுகளை இடிக்கும் நீண்டகாலக் கொள்கையைக் கொண்டுள்ளது.

இஸ்ரேல் காசா மீது நடத்திவரும் தாக்குதலில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கான பாலஸ்தீன மக்கள் சொந்த நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்துள்ளனர். (நி-8)

## பாகிஸ்தானில் கலவரம் 7 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இனக் கலவரத்தில் குறைந்தது ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள குர்ரம் மாவட்டத்தில் இரு எதிரி குழுக்களுக்கு இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் படுகாய மடைந்ததால்



## பாலைவனத்தில் பனிப்பொழிவு!



(ஜெர்தா)

சவுதி அரேபியப் பாலைவனத்தில் வரலாற்றில் முதல் முறையாக பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் அல்-ஜாவ்ஃப் பகுதியில் நிலவும் பனிப்பொழிவால், பாலைவன மணல் வெண்ணிற போர்வை போர்த்தியது போல இருக்கும் காட்சிகள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

வறண்ட பாலைவன நிலப்பரப்பில் இவ்வாறு குளிர்கால நிகழ்வுகள் இடம் பெறுவது அதிசயமாக பார்க்கப்படுகின்றது.

அரபிக் கடலில் இருந்து உருவாகி ஓமன் வரை நீண்டு இருக்கும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமே இந்தப் பனிபொழிவிற்கு காரணம் என்று ஐக்கிய அரபு அமீரகத்தின் தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் கன மழையால் வெள்ளக்காடாக காட்சியளித்த பாலைவனத் தில் தற்போது பனிப் பொழிவும் நிகழ்ந்துள்ளது.

சவூதி அரேபியாவின் வானிலைத் திணைக்களம் எதிர்வரும் நாட்களுக்கு கடுமையான வானிலை எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. நீண்ட கால பாதகமான நிலைமைகளுக்கு தயாராகுமாறு மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-8)

## கியூபாவை உருக்குலைத்த ரஃபே

(ஹவானா)

ரஃபேல் சூறாவளி காரணமாக கியூபா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மணித்தியாலத்துக்கு 185 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய காற்று, நூற்றுக் கணக்கான வீடுகளை சேதப்படுத்தியது, மரங்களை வேரோடு சாய்த்தது, மின்கட்டமைப்பை சீர் குலைத்தது மற்றும் பிற உட்கட்டமைப்புகளையும் சேதப்படுத்தியது.

எனினும், ரஃபேல் தாக்கத்தினால் கியூபாவில் உடனடியாக எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை.

மேலும் ரஃபேல் சூறாவளி 2 ஆம் வகை புயலாக வலுவிழந்து, வளைகுடாவில் மெக்ஸிகோவை நோக்கி நகர்ந்



துள்ளது.

சூறாவளி காரணமாக 461 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்ததாக கியூபா அதிகாரிகள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவிய அமெரிக்கா

# பிலும் தொடருமா?

## திருக்கும் உலக நாடுகள்

லை
ம்ட்



ில்லை.
ன் நல
ளைத்து
மோத
லெக்கை
செயற்படு
தெரி

உக்ரை
தாடரும்
றைமுக
உக்ரை
கப்பெரிய

அளவில் ஆயுதங்கள் வழங்கி வருகிறது. டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி ஆனதும் இது தொடருமா? என்பதை வைத்து தான் உக்ரைன்-ரஷ்யா போர் அடுத்த கட்டத்திற்கு செல்லும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (நி-8)

## மெக்ஸிகோவில் ட்ரக் வண்டியிலிருந்து 11 சடலங்கள் மீட்பு



(மெக்ஸிகோ)

வன்முறையால் பாதிக்கப்பட்ட தெற்கு மெக்சிகன் நகரத்தில் ட்ரக் வண்டியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் இரு பெண்கள், இரு சிறுவர்கள் உட்பட 11 பேரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த ட்ரக் வண்டியில் சடலங்களாக மீட்கப்பட்டவர்களின் அடையாளங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பான விசாரணையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

சில்பான்சிங்கோ நகரம் தெற்கு மாநிலமான குரேரோவின் தலைநகரம் ஆகும். இது பல ஆண்டுகளாக போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு இடையேயான மோதல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு முதல் மெக்ஸிகோவில் 450,000 இற்கும் அதிகமான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)



பதற்றம் ஏற்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை தெரிவிக்கப் படவில்லை. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாகனங்கள் குறிவைக்கப்பட்டு பல உயிர் கள் பலியாகியுள்ளதாக மூத்த அதிகாரி ஜாவே துல்லா கான் தெரிவித்தார். (நி-8)

## ஃபேல் சூறாவளி



461
கள்
பா

நாடு முழுவதிலுமிருந்து 283,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். (நி-8)

# பாதுகாப்பு தர கனடா மறுப்பு

## தூதரக நிகழ்ச்சிகளை ரத்து செய்தது இந்தியா

(ஒட்டாவா)

குறைந்தபட்ச பாதுகாப்பைக் கூட தர முடியாது என கனடா பாதுகாப்பு படையினர் கூறியதை தொடர்ந்து, தூதரகம் சார்பில் ஏற்பட்ட சில முகாம்களை இந்தியா ரத்து செய்துவிட்டது.



காலிஸ்தான் பயங்கரவாதி கொலை தொடர்பான விவகாரத்தில் இந்தியா - கனடா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிராம்ப்டன் நகரில் ஹிந்து சபை கோயில் பகுதியில் இந்திய தூதரகம் சார்பில் அங்குள்ள இந்தியர்களுக்கு சான்றிதழ் வழங்க சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இந்திய அதிகாரிகளின் வருகையை கண்டித்து காலிஸ்தான் ஆதரவாளர்கள் கோயில் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது, கோயிலில் இருந்த பக்தர்கள் மீது காலிஸ்தான் கொடிக் கம்பங்களை வைத்து தாக்குதல் நடத்தினர்.

இதில், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோர் காயமடைந்தனர்.

இச் சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், டொரன்டோ நகரில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகம் உள்ளிட்ட சில இடங்களில் முகாம்கள் நடத்த இந்தியா ஏற்பாடு செய்யப்பட்டு இருந் தது.

இது தொடர்பாக இந்திய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: இந்த முகாம்களுக்கும், அதில் பங்கேற்பவர்களுக்கும் குறைந்தபட்ச பாதுகாப்பை கூட வழங்க முடியாது என கனடா பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர். இதனையடுத்து இந்த முகாம்களை ரத்து செய்ய முடிவு செய்துள்ளோம். என அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றுக்கான 2025.01.01 - 2025.12.31 வரையிலான காலப்பகுதிக்குரிய குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் -2025.

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2024.11.11 இல் இருந்து 2024.11.19 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2024.11.20 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2024.11.20 காலை 10.31 மணி
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் விபரம் குறிப்பிட்டு, "செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி" என்ற முகவரியிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்டு, கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியினுள்ளே கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியை ஏக காலத்திலேயே "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரி அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் எவராயினும் ஒரு ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணத்தை கொண்டு வருவதுடன், அவ் ஆவணத்தின் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி தொகையில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திரங்கள் எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணமும் சபையால் மீளளிக்கப்படமாட்டாது.
07. கறைநிறப் பட்டியலில் பட்டியற்படுத்தப்பட்டவர்களிற்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படுமாயின் அக் கேள்விப்பத்திரம் எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
08. கேள்வி நிபந்தனைகளும் அறிவுறுத்தல்களுக்கும் அமைய கேள்விக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கப்படாதுவிடின் அல்லது கேள்விப்பத்திரத்தில் ஒப்பமிடத்தவறின் எதுவித முன் அறித்தலுமின்றி கேள்விப்பத்திரத்தை நிராகரிப்பதற்கு பிரதேசசபையின் கேள்விச் சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
09. கேள்வியாளரோ அல்லது கேள்விதாரரினால் எழுத்து மூலமாக நியமிக்கப்பட்டு, சபையின் முன் அங்கீகாரம் பெற்றுள்ள கேள்வியாளரின் பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமளிக்கலாம்.
10. சந்தையின் மையப்பகுதியிலிருந்து 500 மீற்றர் (1/2 கி.மீ) தூர சுற்று வட்டத்தில் மீன், மரக்கறி, இறைச்சி மற்றும் சந்தையில் விற்கப்படும் பொருட்களை விற்பதும் சபையின் இறைச்சிக்கடையை சூழ 500 மீற்றர் சுற்று வட்டத்தில் இறைச்சி விற்பதும் முற்றாகவே தடை செய்யப்பட்டுள்ளது.
11. மரக்கறி, மீன் ஆகிய சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக சபையுடன் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடுதல் வேண்டும் அவ்வாறு ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாதவிடத்து கேள்விப்பத்திரம் எதுவித முன்னறிவித்தலுமின்றி ,ரத்துச்செய்யப்படும்.
    - I. குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு (நிறுத்தற் கருவி) உற்பத்தியாளர்கள் தெளிவாக பார்க்கக் கூடியதாக வைக்கப்படல் வேண்டும்.
    - II. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறுவை அளவை திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் ஆவணங்கள் எச்சந்தஉப்பத்திலும் சபைக்கு சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.
    - III. உற்பத்திப் பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே உற்பத்தியாளராலேயே தரத்திற்கேற்பவும், விலை கூறி ஏலமிடல் மூலம் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் கட்டாயமாக குத்ததகைதாரர் அவ்விடத்தில் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும். அல்லது குத்தகைதாரரால் எழுத்து மூலமாக கோரிக்கையை முன் வைத்து சபையால் முன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக வேண்டும். ஒரே நேரத்தில் இருவரும் பிரசன்னமாய் இருத்தல் ஆகாது.
    - IV. விவசாய உற்பத்திப்பொருட்கள் எவற்றிக்கும், ஏலமிட்டு விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின்னர் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் இருந்து பத்து சதவீத கழிவுப் பெறுமதி கொண்ட பணத்தினை எந்த தரப்பினரும் அறவிடலாகாது.
    - V. உற்பத்தியாளரிடமிருந்து ஏலமிட்டு பொருட்களை கொள்வனவு செய்யும் வியாபாரிகள் ஏக காலத்தில் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை முடிவுறுத்திக் கொள்வதை ஒப்பந்ததாரர் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் 10% கழிவு பெறுவதை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒப்பந்ததாரர் ஊக்கமளிக்கக்கூடாது.
    - VI. குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பிரதேசசபையால் அங்கீகரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர், திகதி, பொருளின் வகை, பொருளின் நிறை, அறவிடப்படும் வரித்தொகை, மொத்தத் தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும். சந்தையில் பாவிக்கப்படும் பற்றுச்சீட்டு ஒவ்வொன்றுக்கும் பிரதேசசபையால் வடிவமைக்கப்பட்ட முத்திரை பதித்திருத்தல் வேண்டும். பற்றுச் சீட்டின்றி கொடுக்கள் வாங்கல்கள் செய்தலாகாது.
    - VII. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பிரதேசசபையால் ஒதுக்கப்பட்ட இடமொன்றில், குத்தகைதாரரால் உற்பத்தி பொருட்களை ஏலமிடுவதற்கு ஒழுங்குபடுத்திக் கொடுகொடுக்கப்படல் வேண்டும், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடளிடமிருந்து பிரதேசசபைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வீதவரியை அறவிடுதல் வேண்டும்.
    - VIII. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு ஏல விலையின் உச்சமாக 4% (சதவீத) வரி மட்டுமே குத்தகை ஒப்பந்ததாரரால் அறவிடப்படலாம்.
    - IX. எமது பிரதேசசபையினால் அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலும் பிறிதொரு பிரதேசசபையினால் வியாபார உரிமம் பெற்று கொண்டுவரப்படும் விற்பனை பற்றுச்சீட்டிற்கும் குத்தகையாளரினால் வரி அறவிடுதலாகாது. நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம்.
    - X. சந்தைக்கு வருகை தருகின்ற நுகர்வோர்களினதும், பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும் குத்தகைதாரரால் இச்சேவைக்காக சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பற்றுச்சீட்டை வழங்கி அறவிடமுடியும்
12. இறைச்சிக் கடைகளிற்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
    - I. பிறிதொரு பிரதேசசபையின் குத்தகைதாரராக இருப்பின் இறைச்சிக்கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
    - II. இறைச்சிக்கடையை குத்தகைக்கு பெற்றவரே வியாபார செயற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் சபையின் .குத்தகைதாரர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவர் வியாபார செயற்பாடுகளில் ஈடுபடுவதாக உறுதி செய்யப்படின் குத்தகை ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்தானதாக கருதப்படும்.

| கேள்வி அறிவித்தல் அட்டவணை - | | | | | |
|---|---|---|---|---|---|
| 2025 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம் | | | | | |
| தொ.இல | குத்தகை விபரம் | 2025 ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை -வாகன பாதுகாப்பு நிலையம் உட்பட(மேடை, அங்காடி நீங்கலாக) | 15,669,049.00 | 156,690.49 | 1,000.00 | |
| 2 | நெல்லியடி மீன் சந்தை | 585,431.00 | 5,854.31 | 500.00 | |
| 3 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 514,404.00 | 5,144.04 | 500.00 | 500.00 |
| 4 | நெல்லியடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 62,260.00 | 622.60 | 500.00 | 500.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,271,270.00 | 12,712.70 | 500.00 | 500.00 |
| 6 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 297,111.65 | 2,971.12 | 500.00 | |
| 7 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 305,910.00 | 3,059.10 | 500.00 | 500.00 |
| 8 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,217,050.00 | 22,170.50 | 500.00 | 500.00 |
| 9 | கொட்டடிச்சந்தை | 551,650.00 | 5,516.50 | 500.00 | |
| 10 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 129,580.00 | 1,295.80 | 500.00 | |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 11 | உடுப்பிட்டி சந்தை | 2,365,385.00 | 23,653.85 | 500.00 | |
| 12 | உடுப்பிட்டி சந்தை வாகன பாதுகாப்பு நிலையம் | 301,125.00 | 3,011.25 | 500.00 | |
| 13 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 235,840.00 | 2,358.40 | 500.00 | 500.00 |
| 14 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,832,600.00 | 18,326.00 | 500.00 | 500.00 |
| 15 | நவிண்டில் சந்தை | 36,850.00 | 368.50 | 500.00 | 500.00 |
| 16 | நவிண்டில் சந்தை கோழிக்கடை | 78,100.00 | 781.00 | 500.00 | 500.00 |
| 17 | நவிண்டில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,179,100.00 | 21,791.00 | 500.00 | 500.00 |
| 18 | மண்டான் சந்தை | 52,800.00 | 528.00 | 500.00 | |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 19 | துன்னாலை வடக்கு சந்தை | 93,720.00 | 937.20 | 500.00 | |
| 20 | துன்னாலை வடக்குச் ஆட்டிறைச்சிக் கடை | 56,034.00 | 560.34 | 500.00 | 500.00 |

    - III. எமது பிரதேசசபையால் நிர்வகிக்கப்படுகின்ற விலங்கறுமனையில் மாடுகள்,ஆடுகள் ஆகியன (விலங்குகள்) வெட்டப்பட வேண்டும்.
    - VI. இறைச்சி வெட்டுவதற்குரிய மாடுகள், ஆடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் தொழுவத்தில் 24 மணி நேரம் தரித்துவைக்கப்பட்டு சபையின் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும் மேலும் எம்மால் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக குத்தகைதாரர் நடந்து கொள்ள வேண்டும்.
    - V. விலங்கறுமனையின் மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகைதாரினால் வேலைக்கு அமர்த்தப்படுவோரின் பெயர்ப்பட்டியல் பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் அவர்கள் தொற்றுநோயற்ற உடல் ஆரோக்கியம் கொண்டவராக உள்ளார் என்பதை சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் பரிசோதித்து மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
13. உரிய நிதி ஆண்டின் கேள்விதொகையை சம மாத தவணைக்கட்டணத்தில் 1/3 பகுதியை முற்பணமாக தை மாதம் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னரான மாதாந்தங்களுக்குரிய சமதவணைக் கட்டணங்களை அடுத்துவரும் மாதம் 10 திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும் காலதாமதமாக தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படின் 10 சதவீத தண்டத்துடன் செலுத்த வேண்டும். முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாத தவணைக்கட்டணமாக கருதி கணக்கு சீர் செய்யப்படும்.
14. மேற்கூறிய நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அத்துடன் குத்தகை உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ எச்சந்தர்ப்பத்திலும் குத்தகைதார் மீறுவராயின், குத்தகை உடன்படிக்கை வலுவற்றதாக கருதப்படும் என்பதுடன் 1/3 பங்கு முற்பணம் மீளிக்கப்படமாட்டாது. எனினும் நிலுவைகள் இருப்பின் அனைத்தும் சபைக்கு குத்தகைதாரரினால் செலுத்த வேண்டும் அவ்வாறல்லாத சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை மூலமாக அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும்.
15. இந் நிபந்தனைகளுக்கமைவாக தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையினால் முன்வைக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு அதற்கு கட்டுப்பட்டவராக செயற்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.
16. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

தொடர்புக்கான தொலைபேசி இல:

தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கட்டைவேலி உப அலுவலகம் : 021 226 1244

கடமை நேரம்
மு.ப. 8.30 – பி.ப. 16.15 வரை

செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
09.11.2024

(C-1549)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 2024.11.09 சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் 55ஆம் பிரிவு இராணுவ முகாம்-கட்டைக்காடு, தாளையடி ஐஸ் தொழிற்சாலை, J.K.W.S.S.P.site office-தாளையடி, தாளையடி RO plant, ஆழியவளை, சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம் கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் (55 ஆம் பிரிவு) கேவில்-முள்ளியான், மனோகரா அல்வாய், மருதங்கேணி(தாளையடி), நாவலடிச் சந்தி மருதங்கேணி, சித்திவிநாயகர் பாடசாலை, தேவரையாளி, திக்கம்-நெல்லியடி வீதி, உடுத்துறை-வதிரி அரசடி, வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவமுகாம், முள்ளியான், வெற்றிலைக் கேணிகடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் அடுக்கு மாடிக்குடியிருப்பு உக்குளாங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் 2024.11.10 ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ் பிரதேசத்தில் "கார்கில்ஸ் நெல்லியடி, கரவெட்டி பிரதேச செயலகம், கரணவாய், மத்தோனி, நாவலர் மடம், நெல்லியடி - பருத்தித்துறை வீதி, நெல்லியடி, மருதம், திருமகள் சோதி வீதி, தூதாவளை, விக்னேஸ்வரா கரவெட்டி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பளை காற்றாலை மின் உற்பத்தி நிலையம் செம்மலை, செம்மலை கடற்படை முகாம், டயலொக் கோபுரம் நாயாறு, நாயாறு எரிபொருள் நிரப்புதல் கூட்டுறவு நிலையம், கருணாட்டுக்கேணிச் சந்தி, கொக்கிளாய் மருத்துவமனை, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு (15 ஆவது மைல்கல்லடி), கொம்பகாஸ் சந்தி, பரராஜசிங்கம் தோட்டம், புளியமனை சந்தி, எஸ். எஃப்.சி.டி. பி.எஃப் நாயாறு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# நவம்பர் மாதத்தின் முதல் ஐந்து நாட்களில்
## 30,620 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை

இவ்வருடத்தில் நவம்பர் மாதத்தின் முதல் ஐந்து நாட்களில் 30 ஆயிரத்து 620 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 785 ஆகும்.

இந்நிலையில், ரஷ்யாவிலிருந்து 4ஆயிரத்து 488 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 2 ஆயிரத்து 752 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து ஆயிரத்து 821 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரத்து 227 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து ஆயிரத்து 76 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 16இலட்சத்து 51ஆயிரத்து 335 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் 2இலட்சத்து 8ஆயிரத்து 253 சுற்றுலாப் பயணிகளும், பெப்ரவரி மாதத்தில் 2இலட்சத்து 18ஆயிரத்து 350 சுற்றுலாப் பயணிகளும், மார்ச் மாதத்தில் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 181 சுற்றுலாப் பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 867 சுற்றுலாப் பயணிகளும், மே மாதத்தில் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 128 சுற்றுலாப் பயணிகளும், ஜூன் மாதத்தில் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 470 சுற்றுலாப் பயணிகளும், ஜூலை மாதத்தில் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 810 சுற்றுலாப் பயணிகளும், ஆகஸ்ட் மாதத்தில் ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 609 சுற்றுலாப் பயணிகளும், செப்ரெம்பர் மாதத்தில் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 140 சுற்றுலாப் பயணிகளும், ஒக்ரோபர் மாதத்தில் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 907 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலை விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் தேசிய தேயிலை விற்பனை கடந்த ஒக்டோபர் மாதத்தில் சற்று வீழ்ச்சியடைந் துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது. இதன்படி, கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 1,207 ரூபாய் 99 சதமாகக் காணப் பட்ட ஒரு கிலோ கிராம் தேயிலை ஒக்டோபர் மாதத்தில் 1,172 தசம் 15 ரூபாவாக குறைவடைந் துள்ளது.

தேயிலை விற்பனையில் மாதா ந்த தரவுகளின்படி வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்ற போதிலும், கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் உயர்வைக் காட்டுவதாக இலங்கை தேயிலை சபை குறிப்பிட்டுள்ளது. (நி-8)




# ரத்து செய்யப்பட்டுள்ள 3,249 சாரதி அனுமதிப்பத்திரங்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தில் 3000 இற்கும் மேற்பட்ட வாகன சாரதி களின் அனுமதிப் பத்திரங்கள் நீதிமன்றங்களால் தற்கா லிகமாக ரத்து செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகி றது.

2024 ஜனவரி மாதம் முதல் 3,249 சாரதி அனு மதிப் பத்திரங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்க ளத்தின் பணிப்பா ளர் நாயகம் நிஷாந்த அனு ருத்த வீரசிங்க தெரிவித்துள் ளார்.

சாரதிகள் செய்த பல்வேறு குற்றங்களுக்காக நீதிமன் றங்களால் நடத்தப்பட்ட வழக்கு விசாரணைகளின் போது உரிய சாரதி அனுமதிப்பத் திரங்கள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 12.11.2024 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் 47 டிப்பர் மணல், கிரவல், துவிச்சக்கர வண்டிகள், சவல்கள் மற்றும் 20L பிளாஸ்டிக் கான்கள் என்பன ஏல விற்பனை செய்யப்படவுள் ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)

# 12 இந்திய மீனவர்கள் நிபந்தனையுடன் விடுதலை

(கரணவாய்)

எல்லை தாண்டிய நிலையில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர்.

விளக்கமறியலில் இருந்த 12 மீனவர்களும் நேற்று பருத்தித்துறை நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

இந்திய மீனவர்களுக்கு எதிராக நீரியல்வளத்துறை அதிகாரிகளால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இதனடிப்படையில் ஒரு குற்றத்திற்கு ஆறு மாத சாதாரண சிறைத் தண்டணை என்ற அடிப்படையில் மூன்று குற்றங்களுக்குமாக 18 மாதகால சாதாரண சிறை, 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து நிபந்தனையுடன் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டு இருந்தார். (6-8-60)




# இராசிபலன்

09.11.2024
ஐப்பசி 23, சனிக்கிழமை
அட்டமி முன்னிரவு 6.56 மணிவரை

திருவோணம் முற்பகல் 8.53 மணிவரை
சுபநேரம் -3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம் - புநர்பூசம்.

வளவன்

**மேஷம்** எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**மிதுனம்** குறைவாகப் பேசினால் யாரையும் குறை கூறாமல் இருப்பது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்** கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், குடுபத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**கன்னி** நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், ஆனந்தமான நாள்.

**விருச்சிகம்** பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பணப்புளக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, உற்சாகமான நாள்.

**மகரம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாடு முன்னேற்றம் தரும்.

**மீனம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

ஒருவரையும் நம்பாதவனை மற்றவர்களும் நம்பமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலில் அதிக வாக்குகள் கிடைக்கும்

## அநுர தரப்பு நம்பிக்கை



(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சிக்கு கிடைத்த வாக்குகளை விடவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூடுதல் வாக்குகள் கிடைக்கும் என தேசிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட வேட்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தொடர்பில் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் செய்து வரும் பிரசாரத்தில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டினார்

புதிய பாராளுமன்றின் அமைச்சரவை எதிர்வரும் 17ஆம் அல்லது 18ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும். நாட்டை கட்டியெழுப்பும் அமைச்சரவை அதுவே என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# அரச நிர்வாக சேவைகளில் பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு

பொது நிர்வாக சேவை உட்பட பல்வேறு அரச நிர்வாக சேவைகளில் 1200இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

பொது நிர்வாக சேவை மற்றும் கணக்கியல் சேவை ஆகியவற்றில் அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் உள்ளன. மொத்தம் 600 பணியிடங்கள் உள்ளன. இந்தப் பணியிடங்களுக்கான தேர்வுகள் ஏற்கனவே நடத்தப்பட்டுவிட்டன. முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு தொடரும்.

கூடுதலாக பொறியியல் சேவையில் 250 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன. அதே நேரத்தில் திட்டமிடல் சேவை மற்றும் அறிவியல் சேவைகள் ஒவ்வொன்றும் 100 வெற்றிடங்களைக் கொண்டுள்ளன.

இந்த அனைத்து பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு உடனடியாக மேற்கொள்ளப்படும் என்று அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 350 | 300-350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 200-250 | 300 |
| தக்காளி | 300 | 330 | 350 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 240 | 100-150 | 150 |
| கோவா | 200 | 250 | 200 | 250 | 200 |
| கரட் | 160 | 180 | 180 | 150 | 200 |
| பூசணி | 100 | 80 | 80 | 110 | 160 |
| புடோல் | 160 | 180 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 120 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 270 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 500 | 500 | 650 | 500 | 600 |
| வெண்டக்காய் | 100 | 180 | 120 | 80-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 160 | 150 | 100 | 200 |
| பயற்றங்காய் | 450 | 500 | 550 | 200-250 | 400 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 150 | 130 | 200 |
| கறிமிளகாய் | 500 | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 140 | 130 | 30-50 | 200 |
| போஞ்சி | 350 | 400 | 300 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 280 | 350 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 150 | 160 | 150 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 | 350-400 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-130 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 550 | 1200 |
| வெங்காயப்பூ | 400 | 450 | -- | -- | 400 |
| முள்ளங்கி | 150 | 140 | 180 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | -- | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 259



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## இரக்கமும் ஏமாற்றமும்

இரக்கப்படு ஆனால் ஏமாந்து போய்விடாதே என்று புத்திமதி சொல்வது உண்டு. எங்களிலே பல பேர் அதிகமாக இரக்கம் காட்டி அதனாலே ஏமாந்து போய் விடுகின்றோம். நாம் மட்டும் இல்லை. அந்தக் காலத்திலேயே கூட இரக்கப்பட்டு ஏமாந்து போனவர்கள் பல பேர் உண்டு. அதற்கு நிறைய கதைகளையெல்லாம் சொல்வார்கள் ஆன்மிகப் பேச்சாளர்கள். அதிலே ஒரு கதையை இப்போது உங்களுக்கு சொல்லலாம் என்று ஒரு ஆசை.

சின்னப்பிள்ளைகள் எல்லாம் இந்தத் தகவலை அதிகமாகக் கேட்கின்ற மாதிரி தெரி கின்றது. அதனாலே இது மாதிரி கதைகளும் அவ்வப்போது இதிலே வந்து கொண்டிருக்கின்றது. பெரியவர்கள் எல்லாம் இதை ஒரு பொருட்டாக கருதக் கூடாது. பெரியவர் களிலேயும் பல பேருக்கு இந்த மாதிரி கதைகள் தேவைப் படலாம். அவர்களும் இதை கேட்டு வைத்துக் கொள்ளலாம். சரி இப்போது கதைக்கு வருவோம்.

ஒரு காட்டிலே ஒரு முனிவர் இருந்தார். அந்தக் காலத்து முனிவர்கள் எல்லாம் காட்டிலே தான் இருந்தார்கள். அதனாலே இந்த முனிவர் காட்டிலே ஒரு ஆச்சிரமம் போட்டுக் கொண்டு அங்கே உட்காந்திருந்தார். மிகவும் இரக்க சுபாவம். அந்தக் காட்டிலே அவருக்கு துணையாக இருந்தது ஒரு நாய். எப்போதும் அவரையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும்.

ஒரு நாள் அந்த நாய் ஆச்சிரமத்திற்குள்ளே ஒரு மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது. முனிவர் அதைப் பாரத்தார். மனது மிகவும் இளகிப் போனார். அந்த நாயைக் கூப்பிட்டார். அது அருகில் வந்து நின்றது. ஏன் அழுகின்றாய் என்று கேட்டார். எனக்கு இந்தக் காட்டிலே வாழ்வதற்கு பயமாக இருக்கிறது என்றது. நான் இருக்கும் போது உனக்கு என்ன பயம் என்றார்.

நீங்கள் எப்போதும் என் பக்கத்திலே இருப்பதில்லை. சில சமயம் காட்டிலே அங்கேயும் இங்கேயும் தனியாகப் போய் வந்து கொண்டிருப்பேன். இந்தக் காட்டிற்குள்ளே நிறைய நரி இருக்கிறது. எந்த நேரம் என்மேல் பாய்ந்து கடித்து விடுமோ என்று பயமாக இருக்கிறது என்றது.

கவலைப்படாதே என்னிடம் மந்திர சக்தி இருக்கிறது. அதை உபயோகப்படுத்தி உன்னை நரியாக மாற்றி விடுகின்றேன் என்றார். அதே மாதிரி ஒரு மந்திரத்தை சொன்னார் அந்த நாய் உடனே நரியாக மாறிவிட்டது. இனிமேல் கவலைப்படாதே இங்கே இருக்கின்ற மற்ற நரிகள் கூட உன்னைப் பார்த்தால் பயப்படும் என்றார். அப்படியே சிறிது நாட்கள் போனது. மறுபடியும் நரி உருவத்திலே இருந்த இந்த நாய் அழுதது. மறுபடியும் ஏன் அழுகின்றாய் என்று கேட்டார் முனிவர்.

இந்தக் காட்டிலே நிறைய சிறுத்தை இருக்கிறது. அதைப் பார்க்கும் போது எல்லாம் எனக்கு பயமாக இருக்கிறது. எந்த நேரத்திலே என்ன ஆகுமோ? என்றது. அப்படியா? சரி கவலைப்படாதே உன்னையும் ஒரு சிறுத்தையாக மாற்றி விடுகின்றேன் என்றார். மற்ற சிறுத்தைகள் உன்னைப் பார்த்து பயப்படுவது போல் செய்து விடுகின்றேன் என்றார். அதே மாதிரி செய்து விட்டார்.

சிறிது நாட்கள் போனது. சிறுத்தை உருவத்திலே இருந்த இந்த நாய் மறுபடியும் அழுதது. என்ன காரணம் என்று விசாரித்தார். இந்தக் காட்டிலே நிறைய சிங்கம் எல்லாம் இருக்கிறது. அதனாலே என்க்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று பயமாக இருக்கின்றது என்றது.

முனிவர் பார்த்தார். சரி உன்னையும் ஒரு பெரிய சிங்கமாக மாற்றி விடுகின்றேன் என்று கூறி மாற்றிவிட்டார். நீ இப்போது இந்தக் காட்டிற்கே ராஜா என்றார். சிங்கமாக இருந்த நாய் யோசிக்க ஆரம்பித்தது. உடனே அந்த முனிவர் மீது பாய்ந்து கடிக்க வந்தது. என்ன இது என்னைக் கடிக்க வருக்கின்றாய் என்றார்.

நீ என்னை விட பெரிய சிங்கமாக யாரையும் மாற்றிவிடக்கூடாது. அதனாலே உன்னை உயிரோடு விட்டு வைத்தால் ஆபத்து என்று சொல்லி அருகில் வந்தது. ஆகா! இரக்கம் காட்டி ஏமாந்து போய்விட்டோம் என்பது அப்போது முனிவருக்கு புரிய ஆரம்பித்து விட்டது. உடனே சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். உடனே ஒரு உறுதியான ஒரு மந்திரம் சொன்னார். அந்த சிங்கம் மறுபடியும் நாயாக மாறியது. வேறு வழியில்லாமல் அவர் காலையே மறுபடியும் சுற்றி வர ஆரம் பித்தது.

இரக்கம் காட்டலாம். ஆனால் ஏமாந்து விடக்கூடாது என்று நாம் இதிலேயிருந்து தெரிந்து கொள்ள வேண்டியது. இந்தக் காலத்திலே அதே மாதிரி முனிவரும் நாயும் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். சும்மா ஒரு கற்பனை தான். நாம் அங்கே போகின்றோம். அந்த நாயைத் தனியாக கூப்பிடுகின்றோம். அது எழுந்து ஓடி வருகின்றது. அதை அழைத்துக் கொண்டு தனியாகப் போய் ஒரு மரத்தடியிலே நிறுத்தி அதற்கு அறிவுரை சொல்லுகின்றோம். இதோ பாரு நாயே! எவ்வளவு நாள்தான் அவரிடம் வாலை ஆட்டிக் கொண்டே நின்று கொண்டிருப்பாய்.

இந்தக்கதையிலே வருக்கின்ற நாய் மாதிரி ஏமாந்து போகலாம். கொஞ்சம் சாமர்த்தியமாக நடந்து கொண்டால் நல்லபடியாக வாழலாம் என்கின்றோம். என்ன செய்யலாம் சொல்லுங்கள் என்றது அந்த நாய். அந்த நாய் மாதிரி முனிவரிடம் என்னை நரியாக மாற்று சிங்கமாக மாற்று என்று கேட்டுக்கொண்டிருக்காதே. எனக்கு என்ன வேணும் என்பதை நானே தேடிக் கொள்கின்றேன். கொஞ்ச நேரத்திற்கு உங்கள் மந்திர சக்தியை எனக்கு தானமாகக் கொடுங்கள் என்று கேள். இரக்கப்பட்டுக் கொடுப்பார்.

அதற்கு அந்த நாய் நல்ல யோசனை தான். இதே யோசனை ஏற்கனவே இருந்த இன்னொரு நாய்க்கு வந்து விட்டது. அதனாலே தான் அந்த நாய் இப்போது முனிவராக உட்கார்ந்து கொண்டிருக்கிறது. முனிவராக இருந்த நான் நாயாக மாறி அவரை சுற்றிக் கொண்டு கிடக்கின்றேன். அது மட்டுமில்லை நீங்கள் கூடக் கூப்பிட்டு அறிவுரை செய்கின்ற அளவிற்கு நிலைமை ஆகிவிட்டது என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# இராமநாதன் வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணம்

பேரூந்து (AC), மற்றும் வான் போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (On call) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) -2025

தவிசாளர், கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதிவாய்ந்த கம்பனிகள், அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் (வளாகம்) |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 10-14 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus (AC) | 26-30 | 03 | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |

1. விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை 25.11.2024 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. வாகன முற்பதிவானது 2012ஆம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர் மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால் மேற்பார்வை செய்யப்படும்.
5. பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதானவளாகத்தில் இருந்தும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்து கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது.
   - பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   - தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். அல்லது சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் வாகன பயன்பாடு தொடர்பான வெளிப்படுத்தல் விண்ணப்பதாரிக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
   - வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறித்த ரூபாயினை குறைந்த வருமானமாக ஈட்டியிருத்தல் வேண்டும்.
     1.1 பிரயாணிகள் வான் /Passenger Van (10 - 14 இருக்கைகள்) ரூ 500,000.00
     1.2 பிரயாணிகள் பேருந்து /Passenger Bus (AC) ( 26 - 30 இருக்கைகள்)ரூ 500.000.00
   - குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய உடல் உள ஆரோக்கியமான சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.
7. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் வணிகத்தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள் மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு வைப்புப்பணமாக (Bid security) ரூபா 15,000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 10.03.2025 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புப் வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
9. விண்ணப்பங்கள் யாவும் பிரதானவளாகத்திற்கானவை தனியாகவும் கிளிநொச்சிவளாகத்திற்கானவை தனியாகவும் பூரணப்படுத்தப்பட வேண்டும்.
10. முழுமையான தமிழ் மொழியிலான கேள்வி விண்ணப்பத்தினை கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3,000. 00 நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 970000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
11. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப்பத்திரம் (Bid security Certificate) மற்றும் விண்ணப்பச் செயலாக்கப் பணப்பற்றுச்சீடு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும், மேற்குறித்த பத்திரங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
12. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூலஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2025" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.11.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது நேரடியாகக் கையளித்தல் வேண்டும்.
13. கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் (Pre Bid Meeting)

    திகதி : 18.11.2024 நேரம்: 02:00pm

    இடம் : பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

    ஏலத் திறப்பு (Bid Opening)

    01.திகதி:- 25.11.2024

    02.நேரம்:- 02:00 pm

    03.இடம்:- பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

    04.ஏலம் திறக்கப்பட்டு முதல் விலை ஏலங்கள் மதிப்பிடப்படும் பின்னர் தொழில் நுட்ப ரீதியில் ஏலங்கள் மதிப்பிடப்படும்

    05.ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமூகமளிக்கலாம்.

**மேலதிக தகவல்களுக்கு: சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/பொதுநிர்வாகக் கிளை**
**Tele: 021 222 6517, Fax:- 021 222 6517.**

**தவிசாளர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 09.11.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பங்களிப்பை அரசியலில் மேம்படுத்துவோம்
## விழிப்புணர்வு நாடகம்



(மன்னார்)

நாடளாவிய ரீதியில் பாராளுமன்ற தேர்தல் பிரசார பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் தேர்தலில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிக்கும் முகமாகவும் அரசியலில் பெண்களின் அங்கத்துவத்தினை ஸ்திரப்படுத்துவதை நோக்கமாகவும் கொண்டு தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று முன்தினம் மன்னார் பேருந்து நிலையத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பேருந்து நிலையத்தில் காட்சிப் படுத்தப்பட்ட வீதி நாடகத்தினை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்,மாவட்ட உதவி அரசாங்க அதிபர், அரச உத்தியோகத்தர்கள், மாதர் அபிவிருத்தி ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டு நாடகத்தை முழுமையாகப் பார்வையிட்டனர். (நி-6-8-285)

## கவிதை போட்டியில் மதுராஜினி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய விழாவில் கவிதையாக்க மரபுக் கவிதைப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியான செல்வி. பு.மதுராஜினி முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகம் இணைந்து நடத்திய போட்டி கடந்த மாதம் 15 ஆம் திகதி நடைபெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# இரு வெதுப்பகங்களுக்கு மன்னாரில் சீல் வைப்பு

(மன்னார்)

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தொடர்ச்சியாக சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த இரண்டு வெதுப்பகங்களுக்கு நீதிமன்ற உத்தரவைப் பெற்று மன்னார் பொது சுகாதார பரி சோதகர்கள் சீல் வைத்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் குறித்த வெதுப்பகங்கள் தொடர்பில் பரிசோதிக்கப்பட்டு அங்குள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப் படவேண்டும் என கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும் குறித்த வெதுப்பகங்கள், அறிவிப்புக்கள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் நேற்று முன்தினம் குறித்த வெதுப்பகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது

குறித்த இரண்டு வெதுப் பகங்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி மறுப்பு தொடர்பில் நீதிமன்ற அறிவித்தல்களும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

மேலும் மாவட்டத்தில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வரும் உணவகங்கள் தொடர்பிலும் மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணி மனையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-285)



கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 627



ஆச்சாரியரே! ஜாக்கிரதை! நான் ஒரு கொலைகாரனைப் பிடித்து அனுப்பி என் தம்பியைக் கொன்று விட்டு வரச் சொன்னதாகவா சந்தேகிக்கிறீர்!

"ஒரு நாளும் இல்லை, தாயே! அவனை உனது நம்பிக்கைக்குரிய தூதன் என்று நினைத்துக்கொண்டு நீ அனுப்பினாய். அது தவறாயிருக்கலாம் அல்லவா? அவன் மாற்றார்களின் ஒற்றனாயிருக்கலாம் அல்லவா?"

"இல்லவே இல்லை, ஆதித்த கரிகாலன் அவனை என்னுடைய உதவிக்கு அனுப்பினான். அவனைப் பூரணமாக நம்பலாம் என்று எழுதி அனுப்பினான்."

"ஆதித்த கரிகாலனும் ஏமாந்திருக்கலாம் அல்லவா இளவரசி? வழியில் அவன் மாற்றப்பட்டும் இருக்கலாம் அல்லவா? நான் இங்கே வரும்போது 'ஒற்றன்' என்ற குற்றச்சாட்டு என் காதில் விழுந்தது. மேலே இருந்தவனைப் பார்த்துக் கீழே நின்றவன் குற்றம் சாட்டினான். அது என்ன, அம்மா?"

"மேலே நின்றவன்தான் என் தமையன் அனுப்பிய தூதன். வாணர் குலத்தில் வந்த வல்லவரையன் வந்தியத்தேவன்.

கீழே நின்றவர் வைத்தியர் மகன் பினாகபாணி. வந்தியத்தேவனைப் பழுவேட்டரையர்களின் ஒற்றன் என்று வைத்தியர் மகன் குற்றம் சாட்டினான், என்ன அறிவீனம்?

ஏன் இருக்கக் கூடாது, தாயே!" "ஒருநாளும் இருக்கமுடியாது, பழுவேட்டரையர் காவலிலிருந்து அவன் தப்பி வந்தவன். அவனைத் திரும்பக் கைப்பற்றப் பழுவேட்டரையர்கள் எத்தனையோ ஆட்களை அனுப்பிப் பிரம்மப் பிரயத்தனம் செய்தார்கள்.

அவனிடம் பழுவூர் முத்திரை மோதிரம் எவ்விதம் வந்தது தாயே?

"அந்த வஞ்சக அரக்கி, மாயமோகினி விஷ நாகம் தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள் பழுவூர் இளையராணி கொடுத்துத்தான் அவனுக்கு அம்மோதிரம் கிடைத்தது.

அது உனக்குத் தெரிந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். நான் சொன்னால் நீ நம்பியிருக்கமாட்டாய். அந்த வல்லத்து வீரன் பழுவேட்டரையர்களின் ஒற்றன் அல்ல என்பது சரி. ஆனால் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருக்கலாம் அல்லவா!"

அது எப்படி முடியும்? எப்படி முடியும் என்று சொல்கிறேன். வந்தியத்தேவன் நீ இலங்கைக்கு அனுப்பிய அந்தரங்கத்தூதன், தஞ்சைக் கோட்டைக்கு வெளியில் பழுவூர் ராணியைப் பல்லக்கில் சந்தித்தான். அப்போது முத்திரை மோதிரத்தைப் பெற்றுக் கொண்டான். பிறகு கோட்டைக்குள் பழுவூர் அரண்மனையின் அந்தப்புரத்தில் அவளைச் சந்தித்தான். அவனைப் பழுவூர் இளைய ராணி பொக்கிஷ நிலவறையில் ஒளித்து வைத்திருந்து வெளியே அனுப்பினாள். உன்னிடம் ஓலை கொண்டு வரப் போகிறான் என்று அவளுக்குத் தெரியும்.

இலங்கையிலிருந்து அவன் திரும்பி வரும் போது அரிச்சந்திர நதிக்கரையில் பாழடைந்த பாண்டியன் அரண்மனையில் நள்ளிரவில் அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசினார்கள். அதற்குப் பிறகும் பழுவூர் முத்திரை மோதிரம் வந்தியத்தேவனிடம் இருக்கிறது. இதையெல்லாம் பற்றி நீ என்ன நினைக்கிறாய், அம்மா! உன் தூதனிடம் இன்னமும் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறாயா?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## நாட்டுப்பற்று

முன்னொரு காலத்தில் மணிவர்மன் என்னும் மன்னர் மதுரையை சீரும் சிறப்புமாக ஆட்சி புரிந்து வந்தார். அவருடைய மனைவி ராணி பத்மாவதி மீது உயிரையே வைத்திருந்தார்.

அந்நாட்டு மக்கள் தங்கள் அரசனையும் அரசியையும் மிகவும் நேசித்தனர். எங்கும் பசுமையும் வளமையும் குடிகொண்ட அந்த நாட்டில் மக்களுக்கு எந்த ஒரு குறையும் வைக்காமல் மன்னன் ஆட்சி செய்து வந்தார்.

மக்கள் மகிழ்ச்சியாக இருந்தாலும் அரசன், அரசி இருவருக்கும் மனதுக்குள் ஒரு பெரும் குறை இருந்தது. திருமணமாகி, பல ஆண்டுகள் ஆகியும் தங்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்பது தான் அது.

எதிர்காலத்தில் தங்கள் நாட்டை ஆள ஒரு வாரிசு இல்லையே என மக்களும் மிகவும் கவலைப்பட்டார்கள். ராணி கலங்கும்போதெல்லாம் மன்னன் அவரை சமாதானம் செய்துவந்தார்.

ஒரு நாள் மதுரை மாநகருக்கு முனிவர் ஒருவர் விஜயம் செய்தார். மன்னரும் மகாராணியும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தனர். முனிவரின் காலில் விழுந்து வணங்கி தங்கள் குறையை அவரிடம் தெரிவித்தனர்.

முனிவர் மன்னரை நோக்கி இந் நாட்டு மக்களில் யாராவது ஒரு தாய், தான் பெற்ற ஒரே குழந்தையை வைகை நதிக்கு அர்ப்பணித்தால் உனக்குக் குழந்தை பிறக்கும்" என்று கூறினார்.

அதைக் கேட்டதும் மன்னரும் ராணியும் அதிர்ச்சி அடைந்தனர். எந்த ஒரு தாயும் இதற்கு ஒத்துக்கொள்வது என்பது இயலாத காரியம் என்று நினைத்து இருவரும் தயங்கினர். முனிவரும் இதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறி அங்கிருந்து சென்றார்.

மன்னர் அமைச்சரை நோக்கி யாரேனும் ஒரு தாய், தான் பெற்ற ஒரே குழந்தையை வைகை நதிக்கு அர்ப்பணித்தால், நாட்டில் பாதி பரிசாக அளிக்கப்படும்" என்று முரசு அறிவிக்கச் சொன்னார்.

நாடெங்கும் முரசு அறிவிக்கப்பட்டது. ஆயினும் மக்களில் எந்தத் தாயும் தங்களுடைய குழந்தையை ஆற்றில் விடுவதற்கு முன்வரவில்லை.

நாட்கள் பல கடந்தன. அரசனும் அரசியும் மிகவும் சோர்ந்துபோயினர். அரசனின் உடல்நிலை இக் கவலையால் மிகவும் பாதிக்கப்பட்டது.

அரசனும் அரசியும் கவலைப்படுவதை அரசனின் மெய்க்காப்பாளன் வேலப்பனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவனுக்கு ஓர் ஆண்குழந்தை இருந்தது. பிறந்து ஒரு வருடமே ஆகியிருந்த அக் குழந்தையை வேலப்பனும் அவனது மனைவி ரத்னாவும் மிகவும் நேசித்தனர்.

சில நாட்கள் சென்றன. கவலையினால் மன்னர் நோயுற்று, படுத்த படுக்கையானார். அரசன் மீது மிகுந்த அன்பு வைத்திருந்த வேலப்பனால் இந்தத் துயரைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு குழந்தையின்றி மன்னர் படும் வேதனையைப் பார்க்கச் சகிக்காமல் ஒரு முடிவுக்கு வந்தான்.

வீட்டுக்குச் சென்று தன் மனைவி ரத்னாவை அழைத்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபடமற்ற உள்ளம் அனைவரது பரிவையும் பெறும்.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நேர்மையான தேர்தலுக்கு அனைவரும் உதவுங்கள்

தேர்தல் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை. எனவே ஜனநாயகம் நூறு வீதம் நிலை நாட்டப்பட வேண்டுமாயின், தேர்தல் நேர்மையாக இடம்பெற வேண்டும்.

தேர்தல் நேர்மையாக இடம்பெற வேண்டுமாயின், இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் நேர்மையாகச் செயலாற்றுவது அவசியம்.

ஆம், தேர்தலின் கருவூலமாக இருக்கின்ற வாக்களிப்பு தூய்மையாக இடம்பெறும் போதுதான் மக்கள் வழங்குகின்ற தீர்ப்பு நீதியின் பாற்பட்டதாக அமையும்.

தேர்தல் ஒரு நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கின்றது.

அந்த நாட்டு மக்கள் வழங்குகின்ற தீர்ப்பின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவர்.

எனினும் தேர்தல் வரலாறுகள் ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கிய சம்பவங்களும் உண்டு.

கள்ள வாக்குகள், வாக்கு மோசடிகள் என்பனவும் வாக்குகளை எண்ணுவதில் ஏற்படுகின்ற நேர்மையீனங்களும் மக்களின் தீர்ப்பை மாற்றி விடுகின்றன.

பொதுவில் தேர்தல் பணிகளில் ஈடுபடுபவர்களும் வாக்களிக்கும் உரிமை உடையவர்கள்.

ஏலவே அரச ஊழியர்கள் என்ற வகையில் தபால் மூலம் வாக்குகளை வழங்கியவர்கள்.

அவ்வாறு வாக்களிப்பைச் செய்ததன் மூலம் அவர்கள் ஒரு கட்சிக்கு அல்லது ஒரு சுயேட்சைக்குழுவுக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இங்குதான் ஒரு விடயத்தை அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

அதாவது, தேர்தல் பணியில் ஈடுபடும் அரச ஊழியர்கள் தபால் மூலம் வாக்களித்த பின்பு அவர்கள் கட்சி சார்பற்றவர்களாக – நடுநிலையாளர்களாக – தேர்தல் கடமைகளின் போது பக்கம் சாராதவர்களாகத் தங்களைப் பிரகடனம் செய்து கொள்கின்றனர்.

அதாவது அரச ஊழியர்களுக்கு வாக்குரிமையின் அடிப்படையில் அரசியல் சார்புகள் இருக்கலாம். ஆனால் அவை தபால் மூல வாக்களிப்போடு முற்றுப்பெற்றுவிடுகின்றன.

இனி அவர்கள் நடுநிலையாளர்கள். நீதியான தேர்தலை நடத்தி முடிக்க வேண்டிய கடமையைக் கொண்டவர்கள். அந்தக் கடமையை அவர்கள் கடவுள் சாட்சியாக நேர்மையுடன் செய்தாக வேண்டும்.

அதேபோன்றுதான் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிகள், வாக்குகளை எண்ணுகின்ற பணியில் பங்கேற்பவர்கள், எண்ணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைகள் இம்மியும் பிசகாமல் பதிவேற்றம் செய்பவர்கள், தேர்தல் முடிவை அறிவிப்பவர்கள், தேர்தல் கண்காணிப்புக்குழுவினர், தேர்தலில் போட்டியிடுபவர்கள் சார்பான அவதானிப்பாளர்கள் என அனைவரும் விழிப்பாக இருந்து மக்கள் வழங்கிய தீர்ப்பு உள்ளவாறு வெளிவருவதற்கு மனம், மெய், மொழிகளால் தூய்மையாகச் செயலாற்ற வேண்டும்.

இஃது ஜனநாயகம் நிலை பெறுவதற்கு மிகவும் அவசியமாகும்.

# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு உறுதி

## ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளம் நிச்சயமாக அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அரசாங்கம் ஒன்றே எமக்குக் கிடைக்கப்பெற்றது.

நாம் கட்டுப்பட வேண்டிய பல விடயங்களைச் சர்வதேச நாணய நிதியம் எமக்கு வழங்கியுள்ளது.

2025ஆம் ஆண்டு எமது தேசிய வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 15வீதமாக அமைய வேண்டும் என்பது அதில் ஒன்றாகும்.

இவ்வாறு பல சிக்கல் நிலைகள் காணப்படுகின்றன. ஒன்று நாங்கள் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து வெளியில் வர வேண்டும். அல்லது அந்த ஒப்பந்தத்திற்குள் இருந்து கொண்டே சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

எமது நாட்டின் தற்போதைய பொருளாதார இயலுமையைப் பொறுத்த மட்டில், நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து வெளியில் வர முடியாது.

நிச்சயமாக உழைக்கும் போது செலுத்தவேண்டிய வரி தொடர்பான சிறந்த திட்டம் எம்மிடம் உள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அந்த நிவாரணம் மக்களுக்கு கிடைக்கும்.

அத்துடன், அரச ஊழியர்களின் சம்பளமும் நிச்சயமாக அதிகரிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (ம)

### காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

# பயணிகள் கப்பல் சேவையின் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வு

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் காங்கேசன் துறை மற்றும் நாகப்பட்டினத்திற்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடர்பாக காணப்படுகின்ற முறைப்பாடுகள் மற்றும் திருப்தியின்மை தொடர்பாக ஆராயப்பட்டன.

காங்கேசன்துறை சுங்கத்தில் இரண்டு கரும பீடங்களே தற்பொழுது உள்ளதால் பயணிகள் வெளியேற நேர தாமதம் ஏற்படுகின்றது.

எனவே மேலதிகமாக இரண்டு கருமபீடங்களை செயற்படுத்துமாறு துறைமுக அதிகாரசபை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளது.

மேலும் கடமையாற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நடத்தைகள் தொடர்பில் உள்ள முறைப்பாடுகளை உரிய வகையில் விசாரணை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல் ஆளுநரால் வழங்கப்பட்டது.

சட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய கொண்டுவர அனுமதி மறுக்கபட்ட பொருட்கள்,பழங்கள்போன்றவை தொடர்பில் பயணிகளுக்கு உரிய விழிப்பூட்டல் காங்கேசன்துறை மற்றும் நாகப்பட்டின துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

துறைமுகம், மற்றும் விமான நிலைய பகுதியில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தினரின் கருத்துக்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டது. (ம-33)

# பரந்தனில் விபத்து மூவர் படுகாயம்

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் மூவர் படுகாயமடைந்து கிளிநொச்சிமாவட்டப்பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தானது கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு ஏ 35 வீதியில் நேற்று பகல் 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனமும் முச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம)

# 11 வேட்பாளர்கள் கைது

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துண்டுப்பிரசுர விநியோகம், பதாகைகளை காட்சிப்படுத்துதல், விடுவிப்புக்காக பொலிஸ் நிலையத்திற்குள் அமைதியற்ற முறையில் செயற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 353 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (ம)

# ரூபாவின் பெறுமதி மேலும் உயர்வு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று மேலும் அதிகரித்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 288.13 ரூபாவாகவும், 297.18 ரூபாவாகவும் குறைந்துள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 288.40 ரூபாவாகவும், 297.48 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும் மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்த அதே வேளை, ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. (ம)

# இலஞ்சம் பெற்ற பெண் அதிபர் கைது

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பாடசாலையின் பெண் அதிபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

ராகம பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசால்ல ஒன்றில் கடமையாற்றும் பெண் அதிபர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

சந்தேக நபர் ராகம, மத்துமகல பிரதேசத்தில் வசிக்கும் பெண் ஒருவரின் பிள்ளையைப் பாடசாலையின் முதலாம் தரத்தில் இணைத்து கொள்வதற்கு குறித்த பெண்ணிடம் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா இலஞ்சம் கோரியுள்ளார்.

இதனையடுத்து இந்த பெண் இது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றி ஆணைக்குழுவில் முறைப்பாடு அளித்துள்ளார்.

பின்னர், சந்தேக நபர் தனது பாடசாலையின் அதிபர் அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2024
“எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்.”
-லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி II

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

17

எஞ்சிய 160 உறுப்பினர்களும் மாவட்டங்களில் வாக்காளர்களது விகிதாசாரத்துக்கேற்ப மாவட்டங்களுக்கு பிரித்தளிக்கப்படும்.

இதற்காக முழு இலங்கையினது மொத்த வாக்காளர் தொகையை 160 இனால் பிரிப்பதன் ஊடாக தேசிய கோட்டாத் தொகை அல்லது தகைமை பெறு தொகை பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தொகையினால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் மொத்த வாக்காளர் தொகையை வகுப்பதன் ஊடாக மாவட்டங்களுக்கான ஆசன ஒதுக்கீடு செய்யப்படும். வருடாந்தம் வாக்காளர் தொகை கணிப்பீடு செய்யப்படுவதால், ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய ஆசன ஒதுக்கீடு வருடாந்தம் தேர்தல் ஆணையாளரால் கணிப்பிடப்படுகிறது.

இவ்வெண்ணிக்கையோடு மாகாணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 04 ஆசனங்களில் மாவட்டத்துக்குரிய ஆசனத்தையும் சேர்க்கும் போது கிடைக்கப்பெறுகின்ற ஆசனங்களின் எண்ணிக்கையே அம்மாவட்டத்துக்குரிய மொத்த ஆசனத் தொகையாகும்.

மீதமாக உள்ள 29 உறுப்பினர்கள் தேசியப்பட்டியல் ஊடாக நிரப்பீடு செய்யப்படுவர். அரசியலமைப்பின் 15 ஆவது திருத்தம் அறிமுகம் செய்த 99 (அ) உறுப்புரை, குறிப்பிட்ட அரசியல் கட்சிகளால் அல்லது சுயேட்சை வேட்பாளர்களால் தேசிய மட்டத்தில் (தேசியப்பட்டியல்) பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு 29 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட ஏற்பாடு செய்கிறது.

**மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும் ஆசனங்களின் கணிப்பீடு பற்றிய விபரம் கீழே தரப்படுகிறது.**

2024 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலுக்கான பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் 17,140,354 ஆகும். இதனை 160 ஆல் பிரித்தால் வரும் முழு எண் 107, 127 ஆகும்.

அதாவது ஒரு மவட்டத்திற்கு ஒரு ஆசனம் அல்லது உறுப்பினரைப் பெற இருக்க வேண்டிய பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 107,127 ஆகும். இதுதான் இத் தேர்தலுக்கான தேசிய கோட்டாத் தொகை அல்லது தகைமை பெறு தொகை யாகும்.

2024 ஆம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலுக்கான யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட (கிளிநொச்சி மாவட்டம் உட்பட) பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கை 59 3187 ஆகும்.

எனவே யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான ஆசனங்கள் அல்லது உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காண்பதற்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கையான 593 187 ஐ தகைமை பெறு தொகையான 107,127 ஆல் பிரிக்கவேண்டும். பிரித்தால் வருவது 5 உம் மீதி 57552 வாக்காளருமாகும். எனவே யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு (160 இலிருந்து) 5 ஆசனங்கள் அல்லது உறுப்பினர்கள் ஒதுக்கப்படும்.

மீதி 57552 பதிவுசெய்யப்பட்ட வாக்காளருக்காக ஆசனங்கள் அல்லது உறுப்பினர்கள் ஒதுக்கப்பட முடியுமா இல்லையா என்பது மற்றைய தேர்தல் மாவட்டங்களின் மீதி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்.

மற்றைய தேர்தல் மாவட்டங்களின் மீதி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பார்த்தபோது 11 மாவட்டங்களின் மீதி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் மீதி பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையை விட கூட இருந்ததால் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு மேலும் ஒரு ஆசனம் ஒதுக்கப்படவில்லை.

எனவே யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு 36 உறுப்பினர்களிலிருந்து (மேல் அட்டவணை- 1 இல் காட்டப்பட்டுள்ளது) 1 உறுப்பினரும் மற்றைய 160 உறுப்பினர்களிலிருந்து 5 உறுப்பினர்களுமாக மொத்தம் 6 உறுப்பினர்கள் அல்லது ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு 22 தேர்தல் மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் அல்லது ஆசனங்களின் எண்ணிக்கை அட்டவணை-2இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை-2**

A--2023 ஆண்டின் பதிவுசெய்யப்பட்ட மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை

B- தகைமை பெறு தொகை (A/160) = 17140354/160 = 107127 வாக்காளர்கள்

C=A/B - தகைமை பெறு தொகைக்கு ஏற்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை (முழு எண் / ஈவு)

D = B x C = தகைமை பெறு தொகை X தகைமை பெறு தொகை ஏற்ப உறுப்பினர்கள்

E= A-D, மீதி வாக்காளர்  F- மீதி வாக்காளர்களுக்கான உறுப்பினர்கள்

G= C+F - 160ல் ஒதுக்கப்பட்ட உறுப்பினர்கள்  H- 36ல் ஒதுக்கப்பட்ட உறுப்பினர்கள்

I = G+H – ஒதுக்கப்பட்ட மொத்த உறுப்பினர்கள்

| தேர்தல் மாவட்டம் | A | C=A/B | D=B*C | E=A-D | F | G=C+F | H | I |
|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1765351 | 16 | 1,714,032 | 51,319 | | 16 | 2 | 18 |
| கம்பஹா | 1881129 | 17 | 1,821,159 | 59,970 | 1 | 18 | 1 | 19 |
| களுத்துறை | 1024244 | 9 | 964,143 | 60,101 | 1 | 10 | 1 | 11 |
| கண்டி | 1191399 | 11 | 1,178,397 | 13,002 | | 11 | 1 | 12 |
| மாத்தளை | 429991 | 4 | 428,508 | 1,483 | | 4 | 1 | 5 |
| நுவரெலியா | 605292 | 5 | 535,635 | 69,657 | 1 | 6 | 2 | 8 |
| காலி | 903163 | 8 | 857,016 | 46,147 | | 8 | 1 | 9 |
| மாத்தறை | 686175 | 6 | 642,762 | 43,413 | | 6 | 1 | 7 |
| அம்பாந்தோட்டை | 520940 | 4 | 428,508 | 92,432 | 1 | 5 | 2 | 7 |
| யாழ்ப்பாணம் | 593187 | 5 | 535,635 | 57,552 | | 5 | 1 | 6 |
| வன்னி | 306081 | 2 | 214,254 | 91,827 | 1 | 3 | 3 | 6 |
| மட்டக்களப்பு | 449686 | 4 | 428,508 | 21,178 | | 4 | 1 | 5 |
| திகாமதுல்லை | 555432 | 5 | 535,635 | 19,797 | | 5 | 2 | 7 |
| திருகோணமலை | 315925 | 2 | 214,254 | 101,671 | 1 | 3 | 1 | 4 |
| குருநாகல் | 1417226 | 13 | 1,392,651 | 24,575 | | 13 | 2 | 15 |
| புத்தளம் | 663673 | 6 | 642,762 | 20,911 | | 6 | 2 | 8 |
| அநுராதபுரம் | 741862 | 6 | 642,762 | 99,100 | 1 | 7 | 2 | 9 |
| பொலன்னறுவை | 351302 | 3 | 321,381 | 29,921 | | 3 | 2 | 5 |
| பதுளை | 705772 | 6 | 642,762 | 63,010 | 1 | 7 | 2 | 9 |
| மொனறாகலை | 399166 | 3 | 321,381 | 77,785 | 1 | 4 | 2 | 6 |
| இரத்தினபுரி | 923736 | 8 | 857,016 | 66,720 | 1 | 9 | 2 | 11 |
| கேகாலை | 709622 | 6 | 642,762 | 66,860 | 1 | 7 | 2 | 9 |
| மொத்தம் | 17140354 | 149 | 15,961,923 | 1,178,431 | 11 | 160 | 36 | 196 |

விகிதாசார தேர்தல்முறைகளின் அடிப்படையில் நடந்த 1989, 1994, 2000, 2002, 2004, 2010, 2015 மற்றும் 2020 ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தல்களில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கையை அட்டவணை3 காட்டுகிறது.

**அட்டவணை-3**

| தேர்தல் மாவட்டம் | 1989 | 1994 | 2000 | 2001 | 2004 | 2010 | 2015 | 2020 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 11 | 10 | 9 | 9 | 9 | 9 | 7 | 7 | 6 |
| வன்னி | 5 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 6 |
| மொத்தம் | 16 | 16 | 15 | 15 | 15 | 15 | 13 | 13 | 12 |

2020ஆம்ஆண்டுத்தேர்தலுடன் ஒப்பிடும் போது இம் முறைத் தேர்தலில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் ஒவ்வொரு ஆசனங்கள் குறைவாகவும். கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு ஒவ்வொரு ஆசனங்கள் கூடவும் உள்ளன.

மாவட்ட ரீதியாக 2024ஆம் ஆண்டுத் தேர்தலுக்கான உறுப்பினர்கள் அல்லது ஆசன ஒதுக்கீடுகள் பின்வருமாறு உள்ளது.

கொழும்பு-18, கம்பஹா-19, களுத்துறை-11, கண்டி-12, மாத்தளை-5, நுவரெலியா- 8, காலி- 9, மாத்தறை- 7, அம்பாந்தோட்டை- 7, யாழ்ப்பாணம்-6, வன்னி - 6, மட்டக்களப்பு- 5, அம்பாறை- 7, திருகோணமலை- 4, குருநாகல்-15, புத்தளம்- [illegible], அநுராதபுரம்- 9, பொலன்னறுவை- 5, பதுளை-9, மொனறாகலை-6, இரத்தினபுரி-11, கேகாலை- 9, மொத்தம் 196.

விகிதாசார தேர்தல்முறைகளின் அடிப்படைப் பண்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

i. பெரியளவிலான தேர்தல் மாவட்டமொன்றுக்காக உறுப்பினர்கள் குழுவொன்றை வாக்குமூலம் தேர்ந்தெடுத்தல்.

ii. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்று அல்லது சுயேட்சைக்குழுவொன்றினால் வேட்பாளர் குழுவொன்றின் பெயர்கள் உள்ளடக்கப்பட்ட வேட்புமனுவொன்றை வேட்புமனுக்காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கையளித்தல். ஒவ்வொரு குழுவின் பட்டியலிலும் அந்தந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையை விட மூன்று மேலதிக வேட்பாளர்கள் அடங்கியிருக்கவேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
[527]
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வங்காள விரி...

வாய்ப்புள்ளது என யாழ்.பல்கலைக் கழக புவியியல்துறை பேராசிரியரும் வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தற்போது வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு அருகாகவும் அந்தமான் தீவுகளுக்கு அருகாகவும் இரண்டு காற்றுச் சுழற்சிகள் உள்ளன. இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் 12.11.2024 வரை தொடரும் வாய்ப்புள்ளது.

அதேவேளை இம்மழைப்பொழிவின்போது இடையிடையே இடிமின்னல் நிகழ்வுகளும் இடம்பெறும் என்பதனால் இடிமின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

அதேவேளை இம் மாதத்தில் இன்னமும் இரண்டு தாழமுக்க நிகழ்வுகள் தோன்றும் வாய்ப்புள்ளது.

அதேவேளை எதிர்வரும் 23.11.2024 அன்று தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. தற்போதைய நிலைமைகளின்படி இது ஒரு புயலாக மாற்றம்பெறும் வாய்ப்புள்ளது. அவ்வாறு மாற்றம் பெற்றால் அது வடக்கு மாகாணம் நோக்கியே நகரும் வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இது வங்காள விரிகுடாவின் கடல் மேற்பரப்பு வெப்பநிலையை பொறுத்து மாற்றமடையவும்வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தவறாமல்...

காளர்களும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாக்களிப்பது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமை என்பதால், பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும்.

எனவே, எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி காலை 07.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை உங்களின் பெறுமதியான வாக்கைப் பயன்படுத்துவதற்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம)

## அநுர...

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றளவும் மக்கள் வாழ்வு சுருங்கிக் கிடக்கும் காலத்தில், வாழ்வாதாரம் குறைந்துள்ள காலத்தில், வீட்டு வருமானம் வீழ்ச்சி கண்டுள்ள காலத்தில், வாழ்க்கைச் சுமையை குறைக்கும் ஆட்சியை இந்த அப்பாவி மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இன்று நாட்டில் புதிய ஆட்சியாளர்களால் அவ்வாறானதொரு யுகம் உருவாக்கப்படவில்லை.

திருட்டு, ஊழல், மோசடி, இலஞ்சம் போன்றவற்றால் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதாக ஆட்சிக்கு வர முன்னர் மேடை மேடையாக முழங்கினர். தாம் ஆட்சிக்கு வந்ததும் இலஞ்சம் ஊழல்களை ஒழித்து அதன் பலனை மக்களுக்கு பெற்றுத் தருவோம் என்று கூறினாலும், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், இந்த ஊழல் மோசடிகள் தொடர்பில் தமக்குத் தெரியாது என்று கூறுகிறார்.

மறுபுறம் எரிபொருள் விலைச்சூத்திரத்தை இல்லாதொழிப்போம் என கூறிய அநுர குமார திஸாநாயக்க இன்று விலைசூத்திரத்தின் கைதியாகி, பெரும் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு மாத்திரம் எரிபொருள் சலுகைகளை வழங்கி வருகிறார். சாதாரண மக்களை மறந்து செயற்பட்டு வருகிறார்.

மின் கட்டணமும் 33% குறைக்கப்படும் என்று கூறியும் இதுவரை குறைக்கப்படவில்லை. இன்று தேங்காய் வரிசைகள் கூட காணப்படுகிறது. அரிசியைக்கூட முறையாக வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்று பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதில் பிரச்சினை எழுந்துள்ளது. இதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. விநியோகஸ்தர்களின் பாக்கித் தொகைகளும் செலுத்தப்படவில்லை. உயர்தரப் பரீட்சை பாடவிதானங்களைச் கூடச் சரியாகப் பூரணமாக்காமல் நடத்துவதற்கு தயாராகியுள்ளனர். புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர் தரப்பு உறுப்பினர்களால் பாராளுமன்றத்தை நிரப்புமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கிறார். அவர்களால் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க முடியாது. பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கும். மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே முடியும். எம்மிடம் வேலைத்திட்டம் இருக்கிறது. எனவே ஐக்கிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கிறேன் என மேலும் தெரிவித்தார். (ம)

# வரிக்குறைப்புத் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம்

## ஜனாதிபதியின் ஆலோசகர் அனில் ஜயந்த

அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கான வற் வரி குறைப்புத் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தும் என ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

கம்பஹா - மிரிஸ்வத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழில் முயற்சியாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் உடனான பேச்சுவார்த்தையின் போதும், வற் வரி விலக்குகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பாடசாலை உபகரணங்களின்மீதான வற்வரியை தற்போதைய 18 சதவீதத்திலிருந்து ஐந்து சதவீதமாகக் குறைத்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்களை வாங்குவதற்குப் பணக் கொடுப்பனவை வழங்குதல் ஆகிய இரண்டு முன்மொழிவுகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

மஹஜன சம்பத
திகதி 2024.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 5650
T 9 9 1 6 2
அத சம்பத
T 9 1 6 2
சீட்டிழுப்பு இலக்கம் 225
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1680
X 05 30 34 49 X
Double Chance 25677

மெகா பவர்
திகதி 08/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1998
F 16 06 16 29 44
165079

லக்கி 7 VIP
திகதி 2024.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 0476
M 2 1 7 2 0 5 M

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3892
சீட்டிழுப்பு திகதி 08.11.2024
B 17 23 40 76
B 035768

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 959
கடகம் 23 24 30 39 கடகம்
059636 40

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.11.2024 வெற்றி வாரம் 358
Q 8 8 1 4 7 4
24286
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,237,008.00
DLB
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2624
சீட்டிழுப்பு திகதி 2024.11.08 தினம் வெள்ளிக்கிழமை
19 34 65 74 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,569,124.00
DLB

சனிதா
திகதி 08.11.2024 வெற்றி வாரம் 4785
02 08 23 32 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,683,483.20
ரூ.100,000/- 71268
DLB

சசிரி
553
சீட்டிழுப்பு திகதி 08.11.2024
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 41 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4336
சீட்டிழுப்பு திகதி 08.11.2024 தினம் வெள்ளிக்கிழமை
15 28 34 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,262,984.80
176972
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 15 06 33 44 58
1800
08.11.2024 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,858,481.00
DLB
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2450
சீட்டிழுப்பு திகதி: 2024.11.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,848,076.80
அட கோடிபதி ADA KOTIPATHI
07 09 68 69 W
854828
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாராளுமன்றத் தேர்தல் - 2024

(யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)



2
கஜேந்திரகுமார்
பொன்னம்பலம்








9
செல்வராசா
கஜேந்திரன்

இரு தேசம் ஒரு நாடு இலக்கினை அடைய!
**ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!**

தாயகம் – தேசியம் – சுயநிர்ணயம்

(C-158)



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 235/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 284/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg சம்பா | - 226/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 230/= | |
| 1Kg பயறு | - 659/= | |
| 1Kg சோயா | - 440/= | |
| 750 ml நல்லெண்ணை | - 1460/= | ~~1550/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3525/= | ~~3900/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~500/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(527)

Happy Supermarket
0777 8080 30



## விவசாயிகளுக்கு



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய. இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917

(2549)


# மூவர் கைது

(கொழும்பு)

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (07) கைது செய்யப்பட்டுள்ளதாக ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர். (ம)



# மாபெரும் மக்கள் எழுச்சி கூட்டம்

நவம்பர்
10
மு.ப 10:00

நாவாந்துறை
சென் மேரிஸ் மைதானம்



(C-157)



X 1

வாக்களிப்பீர்
தபால் பெட்டி
நம்பிக்கையின் சின்னம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.